# குலாஸதுத் தஸானீப்

(உபதேசங்களின் சாராம்சம்)

*ஃபார்ஸியில் :* **இமாம் கஸ்ஸாலி ரலியல்லாஹு அன்ஹு**

*தமிழில்:* **மௌலவி கே.பி. முஹம்மது யாகூப் பாகவி அவர்கள்**

## முன்னுரை

"குலாஸதுத் தஸானீப்" (உபதேசங்களின் சாராம்சம்) இமாம் கஸ்ஸாலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் பெரிய நூற்களில் எழுதிய ஆத்மஞான போதனையைச் சுருக்கமாகச் சில பக்கங்களில் தொகுத்துத் தந்துள்ள நூல் ஆகும். இதை இமாமவர்கள் பாரஸீக பாஷையில் எழுதியிருக்கிறார்கள். பின்னர் இஃது அரபியில் ஆக்கப்பட்டிருக்கிறது. இந்த அரபி நூலிலிருந்து ஜனாப் மௌலவி கே.பி. முஹம்மது யாகூப் பாகவி அவர்கள் இந்தத் தர்ஜுமாவைச் செய்துள்ளார்கள். நூல் சிறிதாயினம் அதன் பெயர் சுட்டிக் காட்டுவதுபோல் இமாமவர்களின் ஆத்மஞான போதனையின் சுருக்கத்தையே இதில் படிக்க முடிகிறது.

## குலாஸதுத் தஸானீப்

### நல்ல அமலின் அவசியம்

சுத்த சித்தி பெற்ற அருமை மகனே, அல்லாஹ்வின் வணக்கத்தில் நீடூழி நிற்கவும், அவன் மெய்யடியார்கள் நடந்து ஈடேற்றமடைந்த சன்மார்க்க, ஞானவழியில் உன்னைச் சீருடன் நடத்திச் செல்லவும் அல்லாஹுத்தஆலாவிடம் இறைஞ்சுகிறேன்.

மன்பதைகளின் ஈடேற்றத்துக்கான சர்வ ஞானோபதேசங்களும் இருலோக ரட்சகர் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீது(சொல், செயல்) களில் பொதிந்து கிடக்கின்றறன. அவர்களே சர்வ ஞானங்களையும் தமதகத்தே சம்பூர்ணமாய்ப் பெற்றவர்கள். எனவே, அவர்களின் அருள் ஞானத்திலிருந்தே மெஞ்ஞான சொரூபிகளான மகான்கள் நமக்குத் தந்துள்ள சர்வஞான அகமியங்களும் அடையப்பெற்றவையாய் இருக்கின்றன. அம்மஹானுபாவரின் திருஞான போதங்கள் நேருக்கு நேராக உனக்குக் கிட்டிவிடுமாயின் மற்றவர்களின் "வழித்துலக்கம்" தேவையில்லாது போகும். அங்ஙனம் கிடைக்கவில்லையாயின், அந்தோ உன் வாழ்நாளெல்லாம் செலவிட்டு நீ கற்ற கலைஞானங்களனைத்தும் வீண்தான்.

செல்வஇ முற்கால மகான்களும், தற்கால மேதைகளும் நமக்குப் போதிக்கும் லௌகீக, ஆத்மீகத் தத்துவஞானக் கலைகள் அனைத்தும் ஸையிதுல் முர்ஸலீன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருவாக்குகளை அடிப்படையாக வைத்தே உலக மன்பதைகளுக்குக் கிரந்தங்களாகத் தொகுக்கப் பெற்று இலங்கா நிற்கின்றன. அந்த ஞானக் குவியல்களிலுள்ள ஒவ்வொரு ஹதீதும் ஒரு பேருண்மையைப் போதிக்கிறது. அந்த ஹதீதுகளில் ஒன்று வருமாறு:- "அல்லாஹ் தன் அடியார்களைப் புறக்கணித்து விடுவதற்கு அடையாளம் இதுதான். அந்த அடியார்கள் மறுமையில் தமக்குப் பயனளிக்காதவைகளில்

இங்கு ஈடுபட்டிருப்பார்கள். தாங்கள் சிருஷ்டிக்கப்பட்ட லட்சியத்துக்காகவன்றி வீணே தம் மூச்சைச் செலவிடுவார்கள். இத்தகையவர்களில் உள்ள எவனும் தன் நாற்பதாம் வயதை எய்திய பின்பும் தான் செய்யும் தீமைகைளத் தன்னுடைய நன்மைகள் மிகைக்குமாறு செய்யவில்லை என்றால், அவனுடைய கஷ்டங்கள் நீண்டு கொண்டு போகும். தனக்கு அவன் நரகத்தையே இடமாக அடைவான்". இம்மை வாழ்வே சதமென்றிருப்போருக்கு இந்த ஹதீது ஒன்றே சரியான ஒளி விளக்காக மிளரப் போதுமன்றோ!

மகனே, உபதேசிப்பது எளிது, அதை ஏற்று செயலாற்றுவதுதான் கடினம். காரணம், தன் நப்ஸின் இச்சைகளுக்கு அடிமைப்பட்டவனின் நாவுக்கு ஞான நல்லமுதின் இன்சுவையே கசப்பாகத்தான் தெரியும். பொதுவாக ஆகாத செயல்களில் ஈடுபடுவதிலேயே யாவருடைய மனமும் சார்பு கொள்ளுமாயினும் இம்மையின் சுகபோகங்களைத் தரும் கலாஞானங்களைக் கற்று, அவற்றில் மகா மேதைகளாகச் சிறந்து விளங்க வேண்"டுமெனக் கருதுவோருக்கு ஞான அமுது சொல்லொணாக் கசப்பாயிருப்பதில் வியப்பில்லை. தன்னை ஆலிமென்றும், ஞானமேதை என்றும் ஜனங்கள் புகழவேண்டும் என்பதே அவர்களுடைய தலையாய லட்சியமாயுள்ளது. அமலின் திசையில் கூடத் திரும்பாமல், வணக்கத்தின் பக்கம்கூட எட்டிப் பார்க்காமல் அறிஞன், மேதை என்று புகழப்படுவதற்காக மட்டும் ஞானத்தைக் கற்கும் இந்தச் சித்தாந்தம் மோசமானது. இத்தகைய அறிவீனத்திலிருந்து அல்லாஹ் நம்மை காப்பாற்றுவானாக.

அமலில்லாத இந்தக் கலைஞானங்களே, மறுமையில் தங்களுக்கெதிராக வந்து நின்று சாட்சியம் பகருமென்பதை அவ்வறிவிலிகள் உணரவில்லை. "தன் ஞானத்தால் பயன் அடையாத ஆலிமே கியாமநாளன்று பயங்கர வேதனைக்குரியவராவார்" " தன் ஞானத்தால் பயனடையாத ஆலிமின் மூக்கின் நாற்றத்தைச் சகிக்க முடியாமல் நரகவாதிகள், "என்ன காரியம் செய்துவிட்டாய் பைசாசமே, நரகத்தில் நாங்கள் படும்வேதனை போதாதென்று நீ வேறு உன் நாற்றத்தால் எங்களைத் துன்புறுத்துகிறாயே" என்று அலறித் திட்டுவார்கள். அதற்கு அவர், "நான் கலாஞானங்களைக் கற்றேன். ஆனால் அவற்றிற்கேற்ப வணங்கவில்லை" என்று மறுமொழி கூறுவர்" (ஹதீது)

ஜுனைத் ரலியல்லாஹு அன்ஹு மரணமானபின் தங்கள் தோழர் ஒருவரின் கனவில் தோன்றினார்கள். ஜுனைதே தங்களை அல்லாஹ் எவ்வாறு நடத்துகிறான்? என்று அவர் கேட்டார். "மகத்தான சங்கேத மொழிகளும் பறந்து விட்டன. உன்னத இலக்கியமும் மறைந்தே விட்டது. பரிபாஷைகளடங்களும் பயன் தரவில்லை. கற்ற கலைகளும் கைகொடுக்கவில்லை. ஆனால், நடுநிசியில் நின்று வணங்கிய சில ரகஅத்துகளே எனக்கு உதவின" என்று ஜுனைத் பதிலிறுத்தார்கள்.மகனே, வணக்கதிலும், உயர் இலட்சியத்திலும் மட்டும் எளியவனாகவும், ஒன்றுமில்லாதவனாகவும் வாழ்ந்து விடாதே. கலைஞானங்கள் மட்டும் உனக்கு மறுமையில் உதவி செய்து கடைந்தேறச் செய்து விடாதென்பதை நிச்சயமாக நம்பு. போர்ப் பயிற்சியும், திறனும் மிக்க வீரனொருவன் சகல ஆயுதங்களையும் பூட்டிக் கொண்டு ஒரு பயங்கர வனத்தில் செல்கிறான். அப்போது ஒரு வேங்கை திடீரென அவன் மீது பாய்கிறதென்று வைத்துக் கொள். அந்நிலையில் அவ்வீரன் தன் ஆயுதங்களை உபயோகிக்காதவரை என்னதான் செய்துவிட முடியும்? இதுபோன்று இலட்சக்கணக்கான நுட்பமான மஸ்அலாக்களைக் கற்றிருந்தாலும்இ அதன்படி ஒழுகி நடக்காதவரை அந்த

ஞானங்களால் நற்பயன் கிட்டாது. இந்தஎடுத்துக்காட்டை எண்ணிப்பார். பித்தமும், உஷ்ணமும் மிகைத்து வியாதியால் நொந்து பலஹீனப்பட்டுக் கிடக்கும் ஒரு மனிதன், "சிகின்ஜபீன்" சாப்பிடாதவரை பிணி நீங்காதென்று தெரிந்தும்கூடப் பிடிவாதத்துடன் அதை வாங்கிச் சாப்பிட மறுத்தால் நோய் நீங்குமா? ஆயிரம் ராத்தல் சாராயத்தை அளந்து அளந்து கொடுத்தாலும் நீ குடிக்காதவரை உனக்கு மயக்கமுண்டாகுமா? இம்மணியான கருத்தை மனதில் கொள். அளவற்ற அபூர்வ ஞானங்களைக் கற்றிருப்பினும், மகத்தான கிரந்தங்களைத் திரட்டி வைப்பினும் அதன்படி ஒழுகி நடக்காதவரை அவற்றால் உனக்குப் பயனில்லை.

மகனே,

وَأَن لَّيْسَ لِلْإِنسَانِ إِلَّا مَا سَعَىٰ

"மனிதன் தன் முயற்சிக்கு ஏற்ற அளவேதான் பயனடைவான்" (53:39)

"தன் ரட்சகனின் மேலான சந்திப்பை நாடுபவன் நல் அமல்கள் புரியட்டும்(19:110)

جَزَاءً بِمَا كَانُوا يَعْمَلُونَ

"அமலுக்குத் தக்கவாறே கூலி கொடுக்கப்படுவார்கள்" (56:24)

"அல்லாஹ்வின் மீது உறுதி கொண்டு மெய்வணக்கம் புரிந்தவர்கள் தங்குமிடம் "பிர்தௌஸ்" என்ற சுவர்க்கமாகும். மேலும் அதில் சாஸ்வதமாகத் தங்கிவிடுவார்கள்" (19:108)

إِلَّا مَن تَابَ وَآمَنَ وَعَمِلَ عَمَلًا صَالِحًا فَأُولَٰئِكَ يُبَدِّلُ اللَّهُ سَيِّئَاتِهِمْ حَسَنَاتٍ ۗ وَكَانَ اللَّهُ غَفُورًا رَّحِيمًا

பாவப்பிரயச்சித்தம் (தௌபா) செய்துவிட்டு உறுதியான ஈமானும் கொண்டு மெய்வணக்கம் புரிந்தவர்களுக்கே தீமைகளனைத்தையும் நன்மையாக இறைவன் மாற்றுவான்"(25:70)

இந்தத் திருவசனங்களைக் குறித்தெல்லாம் நீ என்ன நினைக்கிறாய்?

"அல்லாஹ்வையன்றி வணக்கத்துக்கு வேறு யாரும் அருகதையில்லை. நிச்சயமாக, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதரும், அவன் மெய்யடியாருமாவார் என்று உறுதி கொள்வதும், தொழுகையை விடாமல் தொழுவதும், ஜகாத்தைக் கொடுத்துவிடுவதும், நோன்பு நோற்பதும், சக்தியுள்ளவர்கள் ஹஜ்ஜு செய்வதுமான ஐந்து அடிப்படைகளின் மீதே இஸ்லாம் நிர்மாணிக்கப்பெற்றுள்ளது." அல்லாஹ்வின் உள்ளமையை நாவால் கூறி உள்ளத்தால் உறுதிக் கொண்டு, நல் அமல் புரிவதே ஈமான் என்பது" என்ற ஹதீதுகள் குறித்து சிந்தனை செய். மெய்யான வணக்கம் புரிவதில்தான் அடியார்களின் முக்தியும், மோட்சமும் அடங்கியுள்ளன என்பதை எண்ணற்ற ஆதாரங்களால் நான் உனக்கு நிரூபிக்க முடியும்.

மேலும், "நிச்சயமாக அடியான் அல்லாஹ்வின் அருளாலும், பேற்றினாலும் சுவர்க்கம் புகுத முடியாது, அமலால்தான் சுவக்கம் புகுத முடியும்" என்று நான் கூறுவதாக நீ எண்ணினால், நான் சொன்னதை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். அல்லாஹ்வின் பேரருளாலும், சன்மானத்தாலும் கூட அடியான் சுவர்க்கம் புகுதலாம். முக்தி பெறலாம்தான். என்றாலும் அடியான் மெய்வணக்கமென்ற ஆற்றலால் அந்த ரட்சகன் பேற்றுக்கும் கண்ணியத்திற்கும் அருகதை பெற்றால் அது நிச்சயமாகக் கிட்டும் என்பதை உறுதியுடன் நம்பு. ரப்பின் சன்மார்க்க ஏவலை ஏற்றும், விலக்கலை ஒதுக்கியும், தவறாமல் வணக்கத்தில் ஈடுபட்டும், அவ்வணக்கத்தில் சுத்தசித்தி (இக்லாஸ்) உடனிருந்தும் இறைவன் நேசத்தைப் பெறாத வரை அவனுடைய மெய்யன்புக்கு நீ ஆளாக முடியாது. இதுவே

إِنَّ رَحْمَتَ اللَّهِ قَرِيبٌ مِّنَ الْمُحْسِنِينَ

"அல்லாஹ்வின் மகத்தான பேரருள் மெய்யடியார்கள் சமீபத்திலிருக்கிறது"(7:56) என்று திருக்குர்ஆனிலும், மெய்வணக்கம் என்பது அல்லாஹ்வை நீ கண்ணால் பார்ப்பது போல் நல்வணக்கம் புரிவதுதான்" என்று ஹதீதிலும் விளக்கப்பட்டுள்ளது. அவன் அருளும், ரஹ்மத்தும்இ கண்ணியமும் மெய்யடியார்களுக்கே பயன் தரும் மேற்கூறியபடி அவன் அருளுக்கு நீ அருகதையடையாவிடின் அந்த மகா பேறும் பெருமையும் ஒருக்காலும் உன்னை வந்தடையாது.

அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டு விடுவதால் மட்டும் அடியார்கள் சுவர்க்கம் புகுத முடியும்" என்று ஒருவன் கூறுவானாயின், அதுவும் உண்மைதானாயினும், மெய்யான ஈமான், அவனுக்குச் சித்தியாக இடையில் உள்ள மாபெரும் வேதனைகளை எல்லாம் மெய்வணக்கத்தினால் கடக்க வேண்டும். இம்மையில்சன்மார்க்க போதத்தின் மகத்தான முன் மாதிரியிலேயே நம் நடத்தைகள் உருவாக வேண்டும். இகத்தில் தீவிரமாக வணக்கம் புரிந்தால் பரத்திலும் முன்னால் நிற்க முடியும். இங்கே வணக்கத்தில் குறைபாடு உண்டாயின் அங்கேயும் நஷ்டத்துடன் பின் நிற்க வேண்டியது தான். இகத்தில் நம் ஆத்மாவை ஆபத்தின்றிப் பேணிக் கொண்டோமாயின் பரத்தில் பாதுகாப்பு உண்டு. இங்கே நம் ஆத்மாவைச் சோம்பலாக்கினோமாயின், மறுமையில் நம் பாதங்கள் நிச்சயமாக சறுகி விடும். எந்த அளவுக்கு நாம் சன்மார்க்கத்(ஷரீ அத்)தை அவர்களின் ஏற்று அமல் புரிகிறோமோ அந்த அளவுக்குத்தான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹௌலுல் கவ்தரிலிருந்து ஞான அமுதைப் பருக முடியும்.

ஆகவே, இறைவனின் பேற்றினைக் கொண்டு சுவர்க்கம் புகுதலாமென்பதன் சரியான விளக்கமாவது:- உன் மெய்வணக்கங்களுக்கு அவனுடைய மகோன்னதப் பேறு பின்னின்று உதவ வேண்டும். அப்போதுதான் உன் இதயம் பண்பாடு சீர்பட்டு நீயும் பேற்றினைத் தாங்கும் மெய்யன்பனாகிச் சுவர்க்கம் புகுவாய்.

மகனே, உள்ளச்சத்தோடு நல்வணக்கம் புரியாமல் அதன் கூலியை மட்டும் ஒருகாலும் ஆசிக்காதே. பனீ இஸ்ராயீல்களில் ஒரு மனிதர் பல ஆண்டுகள் பயபக்தியோடு இறைவனின் இபாதத்தில் மூழ்கி இருந்தார். அத்தவசிரேஷ்டரின் பக்தியையும், கலப்பற்ற வணக்கத்தின் உயர்வையும் அல்லாஹ் மலக்குகளக்குக் காண்பிக்க நாடினான். ஒரு

மலக்கை அத்தவசீலரிடம் அனுப்பி, "நீங்கள் ஏன் சிரமப்பட்டு வணங்குகிறீர்கள்? உங்கள் ஆத்மாவை இறைவணக்கத்தில் கசக்கி விடுகிறீர்களே! இவ்வளவு கடுந்தவம் புரிந்தாலும் நீங்கள் நரகவாதிகள்தான்" என்று கூறச் சொன்னான். அந்த மலக்கும் மெய்யடியாரிடம் நெருங்கி இறைவன் கட்டளையை எடுத்துக் கூறினார். உடனே அத்தவயோகியார், "நானோ அடியான்இ என் வேலை பணிந்து சிரம்சாய்ப்பதுதான். அவனோ மகரா ரட்சகன். அவன் திருவுள்ளத்தை அவனன்றி வேறு யார் தான் அறிந்து கொள்ள முடியும்.? அவன் நாட்டப்படியே நடக்கட்டும்" என்று பதிலிறுத்து விட்டார்கள். "என் மலக்குகளே, என் அடியான் அசத்தனாயிருந்தும் என் ஆணையை மிகப் பணிவுடன் ஏற்கும்போது, நான் சர்வ சக்தனாயிருந்து கொண்டு என் உத்தம நேசனைப் புறக்கணிப்பேனா? ஆகவே, என் அன்பனை மன்னித்து அணைத்துக் கொண்டதற்கு நீங்களே சாட்சி" என்று அல்லாஹ் கூறினான்.

மகனே, உன்னிடம் கேள்வி கணக்குக் கேட்கப்படுவதற்கு முன் உன் ஆத்மாவைப் பரிசீலித்துக் கேள்வி கணக்கு கேள். நிறுக்கப்படுவதற்கு முன் நீயே உன் ஆத்மாவை நிறுத்துச் சரி பார்த்துக் கொள். "நல்வணக்கமின்றியே சுவர்க்கம் புகுதலாமென்று நினைப்பவன் வீண் பேராசைக்காரன், சுயசிரமத்தால் (இறைவன் அருளின்றி) மட்டும் சுவர்க்கத்தை அடைந்து விட நாடுபவன் வீண் கருமத்தில் ஈடுபட்டவன் தான்" "வணக்கம் செய்யாமல் சுவர்க்கம் புகுத நாடுவதும் ஒருவகைப் பாவம்தான்" என்று முறையே அலீ ரலியல்லாஹு அன்ஹுவும், ஹஸன் பஸரீ ரலியல்லாஹு அன்ஹுவும் கூறியுள்ளனர்.

ஹதீது குத்ஸியில் பின்வருமாறு அல்லாஹ் கூறியதாகக் காணப்படுகிறது. "நல்வணக்கத்தில் ஈடுபடாமல் சுவர்க்கத்தை ஆசிப்பவனே வெட்கம் கெட்டவர்களில் மிக தாழ்ந்தவன். என்னை வணங்குவதில் கருமியாய் இருப்பவனிடம் நான் எப்படி கருணை காட்ட முடியும்?" "அமலை விடுவதை விட அமலின் கூலியை எதிர்பாராமலிருப்பதே ஹகீகத்தென்ற ஞான விளக்கத்திற்கு முதல்படி" என்று ஒரு ஞானப் பெரியாரும் அறிவுறுத்தியுள்ளார்கள். " தன் நப்ஸைப் பணிய வைத்து மறுமைக்கான வணக்கம் புரிபவரே மகா புத்திசாலி, தன் நப்ஸின் இச்சைக்குப் பணிந்து வீணே காலங்கழித்துவிட்டு என் கருணையை நாடுபவனே பெரும் மூடன்" என்ற இரு லோக ரட்சகரின் அழகிய, தெளிவான எச்சரிக்கையைச் செவியேற்று உணர்வு பெறுவாயாக.

மகனேஈ கலாஞானங்களைக் கற்கவும், ஆராயவும் எண்ணற்ற இரவுகளைக் கண்விழிப்பில் கழித்தாயே, உன் இலட்சியம் என்ன? இம்மையின் பேற்றை மட்டும் அடைந்து, பட்டம் பதவி பெற்று உன் உற்றார் உறவினர்களுக்கிடையில் சிறப்பாக விளங்க வேண்டும் என்பதுதானா? அப்படியாயின் அந்தோ, கேடுகாலம்தான் உனக்கு. அப்படியின்றி, ஷரீஅத்தை (சன்மார்க்கத்தை) வளர்க்கவும், ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தீனுக்குப் புத்துயிரளிக்கவும், உன் ஒழுக்கத்தைப் பேணவுமாக இருப்பதை உன் குறிக்கோளாக்கிக் கொண்டிருப்பின் சம்பூரண சௌபாக்கியத்தோடு நீ விளங்கச் சோபனம் கூறுகிறேன்.

"இறைவா, உன் திருமுகக் காட்சிக்கல்லாது வேறெதற்கும் கண் விழிப்பது வீணிலும் வீண். உன்னை இழந்ததற்கல்லாமல் வேறெதற்கும் அழுது புலம்புவதும் வீணிலும் வீண்." என்ற பாட்டிலுள்ள உண்மை சிந்திக்கக் கூடியது. "நீ விரும்பும் விதம் வாழ்ந்து கொள். நிச்சயமாக ஒருநாள் மரணமடையத்தான் போகிறாய். நீ நாடிய செல்வங்களையெல்லாம் சேர்த்து:க்

கொள். எனினும், ஒருநாள் அவை உன்னை விட்டுப் பிரியத்தான் போகின்றன. நீ விரும்பியபடி எல்லாம் நடந்து கொள். அதற்குரிய கூலியும் உனக்குக் கொடுக்கத்தான்படும்" என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

தத்துவ ஞானம், கவிதை, தர்க்கசாஸ்திரம், மருத்துவம், இலக்கியம், வானநூல், காவியம், இலக்கணம் ஆகிய பாடங்களைக் கற்றாயே, என்ன பயனைக் கண்டாய்? இறைவனை மறந்து, உன் மகத்தான ஆயுளை வீணாக்கிக் கொண்டதுதானா? அல்லாஹ்வின் மீது ஆணையாகக் கூறுகிறேன். ஹழ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறக்கியருளப்பட்ட வேதமான இஞ்சீலில் இந்த விவரத்தைப் படித்துள்ளேன். "ஓர் அடியான் மரணமாகி அடக்கம் செய்யப்பட்டதும் முதலில் அல்லாஹ்வே அவனிடம் நாற்பது கேள்விகளைக் கேட்கிறான். அவைகளில் முதல் கேள்வி, அடியானே, பல ஆண்டுகளாக உன் உடலைத்தானே நீ அலங்கரித்துக் கொண்டாய். உன் இதயத்தை ஒரு கனமாவது தூய்மைப்படுத்தினாயா?" என்பதுதான். இதை உன் சிந்தனைக்கு எடுத்துக் கொள்.

"நான் அளித்திருக்கும் மகப்பேறு (நிஃமத்)களில் மூழ்கிக் கிடக்கிறாய். ஆனால், என்னை மறந்து வேறு யாருக்கோ உன் வணக்கத்தை அர்ப்பணிக்கிறாய்?" என்று ஒவ்வொரு நாளும் இறைவன் கூறுவதை நீ கேட்பதில்லை.

மகனே, வணக்கமில்லாத கல்வி ஞானம் கிறுக்குத்தனமானது என்றும், கல்வி இல்லாத அமல் பகைவனென்றும் நான் கருதுகிறேன். ஏனெனில்,வணக்கமில்லாத இந்த ஞானங்கள், உன்னைப் பாவ காரியத்தைச் செய்யத்தூண்டாமலிருக்கலாம் அல்லது வணக்கத்தின் பக்கம் உன்னை இழுக்காமலிருக்கலாம். ஆனால், நாளை நீ நரகத்தில் தள்ளப்படும்போது உன்னை விழாமல் தடுக்க மட்டும் அவற்றுக்கு ஆற்றலில்லை என்பதை உறுதியாக நம்பு. இன்று நீ உன் மறுமைக்கான மெய்வணக்கத்தில் ஈடுபடாவிடின்சென்று போன நாட்களில் தவறிப்போன நற்கருமங்களுக்கு ஈடு தேடிக் கொள்ளாவிடின், பின்னர்,

"மெய்யாகவே, இறைவா, எங்களை மீண்டும் பூமிக்குத் திருப்பி அனுப்ப, நாங்கள் நல்வணக்கங்களைப் புரிந்து வருகிறோம்" (32:12)

என்றே ஓலமிடுவாய். "அறிவற்றவனே, அங்கிருந்துதானே இப்பொழுது இங்கு வந்திருக்கிறாய். நிச்சயமாக நீ அங்கே திருப்பி அனுப்பப்படமாட்டாய்" என்று அப்போது மறுமொழி தரப்படும்.

மகனே, மகத்தான ஆற்றலோடு உன் ஆத்மாவை இறை வணக்கத்தின் பக்கம் திருப்பிவிடு. விரைவிலேயே உன்னைவிட்டு அதுபோய்விடும். கப்ருக்குப் போவதற்கு முன் சிறிது சுகம்பெறும் ஒரு சத்திரம் போன்றதுதான் இகம் என்ற இவ்வுலகம். உனக்கு முன் கப்ருக்குச் சென்று தங்கியிருப்பவர்கள், உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆகவே உஷார்! கையில் வழிப்பயணத்திற்கான சாதனங்களில்லாமல் அங்கே செல்ல வேண்டாம். "இந்த உடல் பறவையின் கூடு மாதிரி அல்லது ஆடு மாடுகளை அடைக்கும் பட்டி மாதிரி" என்று அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள். இவ்விரண்டிலும் எதுவாக நீ இருக்க விரும்புகிறாய்? நீ, கூண்டின் பறவையாய் இருக்க விரும்பினால் ஒரு

முழக்கத்தைக் கேட்பாய். ஸஃது பின் மஆத் ரலியல்லாஹு அன்ஹு மரணத்தினால் இந்த அமளி எனப்பதிலளிக்கப்பட்டது.

“அப்போது, உன் ரப்பளவில் சந்தோஷமாகவும், சந்தோஷப்படுத்துபவனாகவும் மீளுவாயாக! (89:27)

என்று ஒலிக்கப்பட்டது. அதே முழக்கத்தை நீயும் கேட்பாய். நீ பகுத்தறிவற்ற ஆடுமாடுகளின் வகையில் சேர்வாயாகில் உன் நிலைக்கு வருந்தி இறைவனிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

“அவர்கள் மிருகங்களுக்குச் சமமானவர்கள், இல்லை அதிலும் தாழ்ந்தவர்கள்“ (7:179)

என்ற இறைவன் கோபாக்கினிக்கு இலக்காவாய். மேலும், அந்தச் சமயம் உன் உலக இன்பங்கள், செல்வ சாதனங்கள் அனைத்தும் மறைவிலிருந்து அம்பலமாக்கப்பட்டு நரகத்தில் கொண்டுத் தள்ளப்படும்.

மிகக் கொடிய வெயில் காலத்தில் ஒருநாள் ஸூபி ஹஸன் பஸரி ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஒரு நண்பர் குளிர்ந்த ஷர்பத் கொடுத்தார். அதைக் கையில் வாங்கியதும், பயங்கரமாகக் கூச்சலிட்டுக் கொண்டே பஸரி மயங்கி விழுந்து விட்டார்கள். அவர்கள் கையிலிருந்த கிண்ணமும் விழுந்து விட்டது. அவர்கள் மயக்கம் தெளிந்து எழுந்ததும் கூச்சல் போட்டு மயங்கி விழக்காரணம் என்ன? என வினவப்பட்டது. ஹஸன் பஸரி சொன்னார்கள்: “நரகவாதிகள் தாகத்தின் கொடுமையால் சுவர்க்கவாதிகளைப் பார்த்து,

“எங்களுக்கும் சிறிதளவு பருகத் தண்ணீர் கொடுங்கள்“ என்று கூவுவார்கள் (7:50)

என்ற ஆயத்தை நினைத்துக் கொண்டேன். உடனே மயக்கம் வந்து விட்டது“ என்று.

செல்வ, இரவின் முன்பகுதி கழிந்து மக்கள் தூங்கும் சமயம் அல்லாஹ் ஜல்ல ஜலாலுஹு தன் அடியார்களை விளித்து, “உங்களில் யாரேனும் பாவமன்னிப்புத் தேடுவார் உண்டா? ஏதேனும் தேவையைக் கேட்பார் உண்டா? தௌபாச் செய்வோர் உண்டா?“ என்று அழைப்பதாகக் கூறும் ஹதீதின் கருத்தை உணர்ந்து பார். ஞானம் மட்டும் போதும், அமல் வேண்டாமென்றா நினைக்கிறாய்? ' அவர்கள் (நல்லடியார்) இரவில் சற்று நேரம் நித்திரை செய்கின்றனர். சஹர் நேரத்தில் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருகின்றனர்“ (51:1,18)

என்ற திருவாக்கியத்தின் ஆணையின் மூலம் தஹஜ்ஜத் தொழுகையும் விதியாகியுள்ளது.

ஒருநாள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருச்சமூகத்தில் ஸஹாபாக்கள் ஞானபோதம்பெற்றுக்கொண்டிருந்தனர். அதுசமயம் ஹழ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் புத்திரர் அப்துல்லாஹ்வைக் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது. “அப்துல்லாஹ் நடு இரவில் (தஹஜ்ஜத்) தொழுதாரானால் மிக மிக உத்தமரே“ என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். மேலும்இ “நீங்கள் இரவில் அதிகமாகத் தூங்காதீர்கள். ஏனெனில், இரவில் அதிகம் தூங்கினால் கியாமத்தில் “வணக்கத்தில் ஏழையாய்“ எழுப்பப்படுவீர்கள்“ என்றும் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

மகனே, “தஹஜ்ஜத் நேரத்தில் சிறிது தொழுவது உனக்கு நபிலாகும்“ (17:79)

என்பது இறைவனின் ஏவலாகும்.

“நடுஇரவில் ரட்சகனிடம் அவர்கள் (மெய்யடியார்கள்) மன்னிப்புக் கோருவார்கள்“ (3:17)

என்றது அடியான் அல்லாஹ்வுக்குக் காட்டும் நன்றியைக் குறிக்கும். அல்லாஹ்வை அதிகம் திக்ருச் செய்யுங்கள்“ என்பதன் தாத்பரியம், அல்லாஹ்வை அதிகமாக திக்ருச் செய்ய வேண்டியதன் முக்கியத்தைக் குறித்ததாகும். மேலும் “மூன்று சப்தங்களை அல்லாஹ் மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்கிறான். அவை சேவலின் கூவல்இ திருக்குர்ஆன் ஓதலின் இனிய தொனி, நள்ளிரவில் பாவமன்னிப்புக் கோரும் மெய்யடியார்களின் புலம்பல்“ என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மொழிந்துள்ளதைச் சிந்தித்துப் பார்.

ஸுப்யானுத் தௌரி ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்: “அல்லாஹ்வின் ஆணையின் மீது சஹ்ரு நேரத்தில் ஒரு காற்றடிக்கிறது. அது மெய்யடியார்கள் செய்யும் இறைவன் திக்ரையும் அவர்களின் பாவமன்னிப்பு வேண்டுகோள்களையும் சர்வ சக்தனான எஜமானிடம் கொண்டு செல்கிறது. மேலும், இரவின் முன்பகுதி தொடங்கியதும் அல்லாஹ்வின் ஏவல் கொண்டு ஒரு மலக்கு அர்ஷுக்குக் கீழிருந்து, “வணக்கவாளிகள் எழுந்திருக்கட்டும்“ என்று கூவியழைக்கிறார். அப்போது அல்லாஹ்வின் மெய்யன்பர்கள் விழித்துத் தொழுகின்றனர். மீண்டும் நடுஇரவில், வணக்கவாளிகள் எழுந்திருக்கட்டும்“ எனக் கூறப்படுகிறது. அப்போதும் மெய்யடியார்கள் சஹர்வரையும் நின்று துதிக்கின்றனர். மீண்டும், “மன்னிப்புத் தேடுபவர்கள் ரட்சகனிடம் மன்னிப்பு கேட்கலாம்“ என்று ஆணையிட்டுக் கூவப்படுகிறது. அப்போது மன்னிப்பு கேட்பவர்கள் ரட்சகனிடம் இரைந்து மன்னிப்புக்கோருகின்றனர். வைகறை உதயமானதும் அல்லாஹ்வை மறந்த நன்றி கெட்டவர்கள் எழட்டுமென்று கூச்சலெழுப்பப்பட்டதும் அத்தகையவர்கள் குழியிலிருந்தெழும் மையித்துக்கள் போன்று எழுவார்கள்.

மகனே, லுக்மான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், தம் புதல்வரை நோக்கி, “மகனே, விடியற்காலையில் சேவல் கூவுகிறது. நீயோ பிணம் போல் உறங்குகிறாய். சேவலைவிட மட்டமானவனாக ஆகி விடாதே. என்று போதித்துள்ளதை மறந்து விடாதே.ஒரு கவிஞர் கூறுவதைப் பார்.

நள்ளிரவிலே மரக் கிளை யொன்றி லிருந்து

ஒரு புறா கீதமிசைக்கிறது,

நானோ நித்திரை போய்விட்டேன்.

நான் பைத்துல்லாஹ்வை நேசிப்பதெனின்

என்முன் புறா சோக கீத மிசைக்குமோ?

நானன்றோ அழுது அறற்ற வேண்டும்.

ஆகவே, நான் பொய்யன்தான்.

உண்மையாகவே நான் பக்தியில் திளைத்தவன்

என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

ஆனால், நான் அழவில்லை.

பிராணி இனங்கள் முழுவதும் அழுகின்றன.

மகனே, வழிபடுதல், இபாதத்து இவைகளின் மெய்யான தாத்பரியத்தை நீ சரிவர உணர்ந்து கொள்ள வேண்டும். உன் வணக்கங்களும், அன்னறாட வாழ்க்கை முறைகளும் சன்மார்க்க விதிகளுக்கு, அல்லாஹ் ரஸூலின் பரிசுத்தக் கட்டளைகளுக்கு சம்பூரணமாக ஒத்திருக்க வேண்டும். நீ புரியும் அமல்கள் கட்டாயமாக்கப்பட்ட வணக்கங்களைப் போலிருப்பினும், சில சந்தர்ப்பங்களில் ஏதோ காரணத்தை முன்னிட்டு அந்த அமல்களை ஷரீஅத் அனுமதிக்காவிட்டால் அவை வணக்கமாகமாட்டா. ஷரீஅத்திற்கு முரண்பட்டவையேயாகும்.

அதனால் அடியான் குற்றவாளியாகவும் ஆவான். உதாரணமாகத் தொழுகையும், நோன்பும் ஷரீஅத்தில் பர்ளாக்கப்பட்ட அனுஷ்டானங்கள்தாம். எனினும், இரு பெருநாட்களிலும், தஷ்ரீகுடைய (துல்ஹஜ் 11, 12, 13ல்) நாட்களிலும் நோன்பு நோற்றவனும், ஹராமான நேரங்களிலும், திருடப்பட்ட பொருளின் மீது நின்றும் தொழுதவனும் ஷரீஅத்தின்ஆணையை ஏற்று நடந்தவர்கள் என்று மதிக்க முடியுமா?

மேற்கூறப்பட்ட நோன்பும், தொழுகையும் (இபாதத்துகளைப் போலிருப்பினும்) சன்மார்க்க விதிகளுக்குப் புறம்பானவையாயிருப்பதால் அவை ஷரீஅத்தில் அனுமதிக்கப்படாததோடு, (ஷரீஅத்தின் ஆணையை) மீறிய குற்றமும் அவன் மீது சார்கிறது. விளையாட்டின் கருத்தோடு இருந்தாலும்கூட மனைவியோடு கொஞ்சிக் குலாவுதலும் சல்லாபிப்பதும் ஆகும். ஷரீஅத்தும் அதை ஆமோதிக்கிறது. இதனாலெல்லாம் நாம் அறிய வேண்டுவதுயாதெனின், வணக்கங்களின் மெய்யான தத்துவம் ஷரீஅத்தின் கர்த்தாக்களான அல்லாஹ் ரஸூலின் ஏவல் விலக்கல்களுக்குச் சம்பூரணமாக, கூடுதல் குறைதலின்றி முழுக்க ஒத்திருக்க வேண்டும் என்பதே. நோன்பு, தொழுகைதானே என்பதைக் கொண்டு மட்டும் அவற்றை இபாதத், தாஅத் என்று கூறிவிட இயலாது. மேலும், இதே தொழுகை, நோன்பும்கூட அவற்றுக்காக “ஏவல்“ வராதவரை மெய்யானவை என்று சொல்ல முடியாது.

உன் இதயத்தை அற்ப இச்சையிலும், பொடுபோக்கிலும் சிக்க வைத்து விட்டு வாக்கு சாதுரியத்தாலும், சந்தர்ப்பச் சூழ்நிலைகளாலும் மட்டும் ஏமாற்றமடைந்து சன்மார்க்கத்தை எய்தி விட்டதாக இறுமாந்தாயோ. அதுவே, உனக்கு நாசத்தையும் கேட்டையும் உண்டாக்கி விடும். மெய்வணக்கமென்ற வாளால் நப்ஸை அடக்கி, இச்சைகளை ஒடுக்கி ஷரீஅத்தின் விதிகளை ஏற்க உன் கல்பைப் பக்குவப்படுத்தாதவரை அது மெஞ்ஞானம் என்ற மஃரிபத்தால் ஒளி பெறாது.

மகனே! வேறு சில வினாக்களை விண்ணப்பித்துள்ளாய். அவைகளுக்கு வாய்ச் சொல்லாலோ, எழுத்தாலோ விளக்கம் தர முடியாது. புலனுணர்ச்சியால் உணர வேண்டிய

விஷயங்கள் அவை. புலனுணர்ச்சியால் நுகர்ந்து ரசிக்க வேண்டியவை அனைத்தையும் சொற்களாலும், எழுத்துக்களாலும் எவ்வாறு விளக்க முடியும்? இனிப்பையும், கசப்பையும் சொற்களாலோ, எழுத்தாலோ விளக்கித் தெளிவுபடுத்த முடியுமா? அப்படியே முயன்றாலும் அதில் வெற்றி பெற முடியுமா?

மகனே, சிற்றின்ப சக்தியே இல்லாத நபும்ஸகன் ஒருவன் மாதர் போகத்தின் இன் சுவையைத் தனக்கு விளக்கும்படி தன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதினால் அந்த நண்பன், "தோழா, ஒரு கட்டழகியுடன் கூடிப் போகத்தில் ருசியைக் காண இயலுமேல் நீயே அதைத் தெரிந்து கொள்வாய். நான் எப்படி நபும்ஸகனான உனக்கு அதை விளக்க முடியும்?" என்றுதானே பதில் தருவான். அது புலனுணர்ச்சியைப் பொருத்தது.

மகனே, வேறு சில வினாக்களும் இதே வகையில் தானுள்ளன. எழுத்தாலும், சொற்களாலும் விளக்கிக் காட்ட முடிந்த சில நுட்பமான விஷயங்களை எனது "இஹ்யா உலூமுத்தீன்" போன்ற வேறு சில கிரந்தங்களிலும் விபரித்துள்ளேன். அவைகளைத் தேடிப் படித்து பயனடைய ஆசிர்வதிக்கிறேன்.

**ஞான மார்க்கத்துக்கு அவசியமான ஏழு விஷயங்கள்:**

ஞானமார்க்கத்தில் செல்ல வேண்டுமென்றெண்ணுபவனுக்கு ஏழு விஷயங்கள் இன்றியமையாத தேவையாகும். அவற்றில் முதலாவதாக, பித்அத்தில்லாத (நவீனமில்லாத) தீங்குகளற்ற சித்தசுத்தியோடு, அல்லாஹ்வை உறுதி கொண்டுள்ள (இஃதிகாத்) நிர்ணயம் வேண்டும். இரண்டாவதாக, கலப்பற்ற "தௌபா" (பிராயசித்தம்) வேண்டும். மூன்றாவதாக மித்திரனாயினும், சத்துருவாயினம் அவர்களை ஒரே விதமாகப் பாவிக்க வேண்டும். நான்காவதாக, அல்லாஹ்வும் அவன் தூதரும் ஏற்படுத்தியுள்ள ஏவல் விலக்கல்களை தெரிந்து அவற்றிற்கே ஒழுகி வரவேண்டிய அளவுக்காவது ஷரீஅத்தின் ஞானம் அவசியமாயிருக்கிறது. இஃதன்றி மற்றக் கலைகளில் அவனை ஈடேற்றமாக்கி வைக்கக் கூடியதில் சிறிதைக் கற்றுக் கொள்வதிலும் குற்றமில்லை. இதற்காக ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறுகிறேன். ஷிப்லி ரஹ்மத்துல்லாஹ் கூறுகிறார்கள்: "நான் 400 ஞான மகான்களிடம் 4000 ஹதீதுகளைக் கற்றேன். அவற்றுள், "நீ, இம்மையில் எத்தனை நாட்கள் ஜீவித்திருப்பாயோ அத்தனை நாட்களுக்குத் தேவையானவைகளையும், மறுமையில் எத்தனை நாட்கள் தங்குவாயோ அவற்றுக்குரிய அமல்களையும், இறைவனிடம் எந்த அளவு பெற்றுக் கொள்ள விரும்புகிறாயோ அந்த அளவு நன்மைகளையும், நரகத்தின் வேதனையை உன்னால் எந்த அளவுக்குச் சகிக்க முடியுமோ அதற்குரிய வேலைகளையும் செய்து கொள்" என்ற ஒரு ஹதீதை மட்டும் எடுத்துக் கொண்டு மீதமனைத்தையும் விட்டுவிட்டேன். அந்த ஒரு ஹதீதிலேயே என் விமோசனமும், ஈடேற்றமும் அடங்கி இருப்பதையும், நமக்கு முன் சென்றுவிட்ட பின்னால் அருள்பெற்றுத் தோன்றவிருக்கும் மகான்களின் ஞானபோதங்களனைத்தும் பொதிந்து கிடப்பதையும் கண்டேன்.

மகனே, இம்மையின் கலைகளை அதிகமாகக் கற்பது அனைவர்மீதும் கடமையில்லை. ஒரு சிலர் உலக ஆதாயக் கலைகளைக் கற்றாலே போதுமானாது. வணக்கம் புரிவதற்கும்இ ஏவல், விலக்கல்களை அறிந்து ஒழுகுவதற்கும் வேண்டிய அளவுக்குக் கற்பது மட்டுமே அனைவர் மீதும் கடமை என்பதே மேற்கூறிய ஹதீதிலிருந்தும் சம்பவத்திலிருந்தும்

அறியப்படுகிறது. ஷகீகுல் பல்கியிடம் மகாஞானி ஹாத்தமுல் அஸம்மி சிஷ்யராகி ஞானோபதேசம் பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் ஷகீக் தம் மாணவரை விளித்து "ஹாத்தம் என்னிடம் எவ்வளவு காலமாக ஞானம் பெற்று வருகிறார்கள்?" என்று வினவினார்கள். முப்பத்து மூன்று ஆண்டுகள் என ஹாத்தம் பதிலிறுத்தார்கள். "என்னிடம் எவ்வளவு மஸ்அலாக்களைக் கற்றீர்கள்? அதனால் எவ்வளவு பயனடைந்தீர்கள்?"என்று அவர்கள் மீண்டும் வினவினார்கள்.

"எட்டே ஞானபோதங்களைத்தான் கற்றேன்" என ஹாத்தம் பதிலளித்தார்கள். இதைக் கேட்டதும், "அந்தோ ஹாத்திம் உங்களுக்காக 33 வருடங்களை செலவிட்டேன். ஆனால் நீங்களோ எட்டு விசயங்களை மட்டுமே கற்றதாகக் கூறுகிறீர்களே!" என்று ஷகீக் வருந்தினார்கள்.

உடனே ஹாத்தம், "ஞானிகள் நாயகமே, உண்மையைத்தானே கூறினேன். இந்த எட்டு விஷயங்களையன்றி வேறு எதையும் நான் விரும்பவில்லை. இவைகளில்தான் என் இம்மை, மறுமையின் விமோசனமும், மோட்சமும் அடங்கியுள்ளன. இவையே எனக்குப் போதும். மற்ற ஞானங்கள் எனக்கு அவசியமில்லை என்றே நம்புகிறேன்" என்று தம் ஞான குருவுக்கு வினயமாகப் பதிலளித்தார்கள்.

"அப்படியானால் சரி. அந்த எட்டு விஷயங்களையும் எனக்குச் சொல்லுங்கள்" என ஷகீக் ஆக்ஞாபித்தார்கள். ஹாத்தம் பதிலளித்தார்கள்:

"1. ஷைகு அவர்களே! இவ்வையத்து மாந்தர்களோ தாம் இறக்கும் வரையில் சிருஷ்டிகளில் நண்பனைத் தேடிக் கொண்டு கபுரை முதல் பகைவனாகக் கருதி நண்பர்களோடு இம்மையின் மோகத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர். ஆகவேஇந்த நண்பர்களில் யாரேனும் ஒருவர் இறந்ததும் அந்த நண்பனோடு தாமும் கபுரில் புகுந்து கொள்ளாமல் அவனை மட்டும் மண்ணில் புதைத்து விட்டு திரும்பி விடுகின்றனர். எனவே, எனக்கு வாய்க்கும் நண்பன் என்னோடு என் புதைகுழியிலும் புகுந்து எந்நாளும் எனக்கு ஆதரவாயிருக்க வேண்டுமென்று சிந்தித்து என் நல் அமல்களையே எனக்கு நேசனாக எடுத்துக் கொண்டேன். ("நல்லதையே செய்தீர்கள்" என்று ஷகீக் வாழ்த்தினார்கள்)

2. இவ்வுலக மக்கள் நப்ஸ் என்ற சிறையில் சிக்கியும், தீமைக்கு அடிமைப்பட்டும் உழல்வதைக் கண்டேன். அப்போது,

"எவன் தன் இறைவன் சந்நிதியில் (விசாரணைக்காக) நிற்பதைப் (பற்றி) பயந்து தப்பான சரீர இச்சையை விட்டுத் தன்னைத் தடுத்துக் கொண்டானோ, அவன் செல்லுமிடம் நிச்சயம் சுவனபதிதான்"(79:40,41)

என்ற இரட்சகனின் எச்சரிக்கையைச் சிந்தித்தேன். அதுவே உண்மை என்றும் உறுதியுடன் நம்பி, தீமையைத் தூண்டும் நப்ஸை அடக்கிப் பாசங்களை வெறுத்து, வணக்கமென்ற கச்சையை இடுப்பில் உறுதியுடன் கட்டிக் கொண்டு முயற்சியில் இறங்கி விட்டேன். பின்பே என் நப்ஸு இறைவன் வணக்கத்தில் பணிந்து வந்தது. (உடனே, "அல்லாஹ் உனக்கு பரக்கத் செய்வானாக!" என்றார்கள் ஷைகு அவர்கள்)

3. இவ்வுலகில் மனிதன் ஒவ்வொருவனும் அழிந்துபடும் இகலோகச் செல்வங்களைச் சேகரிக்க ஓயாது உழைக்கிறான். கிடைத்ததைத் தனக்கு மட்டுமென்று பாதுகாத்து வைத்துக் கொள்கிறான். ஏதோஅழியாத அற்புதமான பேற்றினை அடைந்து விட்டதாக அதன் மோகத்திலேயே இறுமாந்து இருந்தும் விடுகிறான். இதே சமயம்,

"உங்களிடமுள்ள (பொருள்கள்) யாவும் செலவாகிவிடும். அல்லாஹ்வினிடத்திலுள்ளவையோ என்றென்றும் நிலைபெற்றிருக்கும்"(16:96)

என்ற ரப்பின் திருவசனம் என்னைச் சிந்திக்கச் செய்த உடனே நான் தேடிய செல்வங்களனைத்தையும் ஏழை எளியோருக்கு வாரிக் கொடுத்ததன் மூலம் அல்லாஹ்வின் பொறுப்பில் அமானிதமாக வைத்து விட்டேன். அவைகளை மறுமையில் எனக்குரிய வழிப்பயண ஆகாரமாக பாதுகாக்கப்படும். எனக்காக ரட்சகனிடம் இருக்கும்.

"4. உற்றார் உறவினர் அதிகமாய் இருக்க வேண்டும். அதைக் கண்டு பூரிக்க வேண்டும் என்று கருதி அதில் தான் மனிதனுக்குப் பெருமை கண்ணியம் எல்லாம் உண்டு என்றும் நினைக்கின்றனர் சிலர். செல்வத்தைச் சேகரிப்பதிலும் ஜனத்தைப் பெருக்கிக் கொள்வதிலும்தான் மாண்பும் மகிடையும் இருக்கின்றனவென்று நம்பி அவற்றுக்காக உழைத்துப் பெருமை கொள்கின்றனர். வேறு சிலர், மற்றும் சிலரோ முன்கோபம், கொலை, கொள்ளை, ஏச்சு பேச்சு ஆகியவற்றில் முன்னணியில் நிற்பதில்தான் மனித மகத்துவம், உயர்வு யாவும் அடங்கி இருப்பதாக எண்ணுகின்றனர். பொதுவாக இவற்றை நான் உலக ஜனங்களிடையே கண்டபோது,

"உங்களில் எவன் பக்தியுடையவனாய் இருக்கிறானோ அவன்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியவான்" (49:13)

என்ற திருவசனத்தை ஒருக்கணம் ஆராய்ந்தேன். திருக்குர்ஆனின் போதனையே மகா மெய்யானது. மக்கள் கருத்து முழுக்கவும் மிக்க தவறானது என்பதை உறுதியோடு ஏற்று அல்லாஹ்வின் திருச்சந்நிதியில் மகோன்னதக் கண்ணியத்தை அடையும் நோக்குடன் "தக்வா" என்ற பயபக்தியை ஏற்றுக் கொண்டேன்.

"5. இவ்வுலக மக்கள் பொன் பொருள்களின் மோகத்தால், பட்டம் பதவிகளின் ஆசையால் ஒருவர் மற்றொருவன் மீது ஆத்திரப்படுவதையும் பொறாமை கொள்வதையும் கண்டேன். அப்போது,

"இவ்வுலகத்தில் அவர்களின் வாழ்க்கையின் தரத்தை அவர்களிடையில் நாமே பங்கிட்டோம்" (43:32)

என்ற அல்லாஹ்வின் அறிவுறுத்தலைக் கண்டு இவ்வுலகச் செல்வங்களை நம்மை கேட்காமலே ரட்சகன் ஆதியிலேயே பங்கீடு செய்து வைத்திருக்கும்போது, நாம் மற்றவர்கள் மீது பொறாமைப் படக்கூடாது. ரப்பின் பங்கீடுகளைத் திருப்தியோடு ஏற்று மக்களோடு சௌஜன்யமாக வாழ வேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டேன்.

"6. உலக மக்கள் தங்கள் நப்ஸ் தூண்டும் இச்சைக்கு இலக்காகி ஒருவர் மற்றவரை பகைப்பதைக் கண்டேன். அதுசமயம்,

"நிச்சயமாக, ஷைத்தான் உங்களுக்கு விரோதியாகவே இருக்கிறான். ஆகவே, அவனை நீங்களும் விரோதியாகவே கொள்ளுங்கள்"(35:6)

என்ற அல்லாஹ்வின் கட்டளை என்னைத் தட்டி எழுப்பியது. அதன் பயனாய் ஷைத்தானும், அவன் வழியைப் பின்பற்றிய மூதேவிகளுமே நமக்குப் பகைவர்கள் என்று திடங்கொண்டு ஷைத்தானுக்கு எதிலும் பணியாமல் எல்லாம் வல்ல இரட்சகன் ஏவலுக்கே தலைசாய்த்தேன். அவன் மாண்பைகக் கண்டேன். அவன் சிருஷ்களில் எதையும் வெறுக்காமல் ஒதுங்கிக் கொண்டேன்.

"ஆதமுடைய சந்ததிகளே, நீங்கள் ஷைத்தானை வணங்கக் கூடாதென்றும், நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான விரோதி என்றும் நான் உங்களிடம் உறுதிமொழி வாங்கவில்லையா? நீங்கள் என்னையே வணங்க வேண்டும். இதுதான் நேரான வழி" (36:60,61)

என்ற அல்லாஹுத் தஆலாவின் எச்சரிக்கையையும் கண்டு ஞானம் பெற்றேன்.

"7. இவ்வுலகில் மானிடர் தம் அற்பமான உணவைத் தேடிக் கொள்ள மிகப் மிகப்பாடுபடுகின்றனர். ஆத்மாவைக் கூகூட அதற்காக மகாக் கேவலப்படுத்திக் கொள்கின்றனர். அதன்காரணமாக ஹராமான, சந்தேகமான காரியங்களையும் செய்து விடுகின்றனர். அந்தோ,

"உணவளிக்க அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்ளாத யாதொரு ஜீவராசியும் பூமியிலில்லை" (11:6),

"மனிதனுக்கு அவன் செய்த பயனையன்றி வேறொன்றும் கிடையாது" (53:39)

என்ற திருமறை உபதேசங்களைக் கூட அவர்கள் மறந்துவிட்டனர். நான் இப்புவியில் எண்ணற்ற கோடி ஜீவன்களில் ஒருவன். என் ரிஜ்கின் பொறுப்பை ஹக்குதஆலாவே ஏற்றுக் கொண்டிருக்கும்போது வேறு என்ன வேண்டும்? மறுமையின் பேறுகளைத் தேடி அடைந்து கொள்ள வேண்டியே ஜனங்களை விட்டும் விலகிக் கொண்டேன்.

"8. ஜனங்களில் பல் பொருட்கள் மீதும், அதிகார பலத்தின் மீதும் உற்பத்தியின் மீதும் ஆவல் கொள்கின்றனர். மற்றும் சிலரோ, எதற்கும் தம்மைப் போன்ற அற்ப சிருஷ்டிகளான ஜனங்கள் மீதே நம்பிக்கை வைத்து விடுகின்றனர். அதுசமயம் எனக்கு

"அல்லாஹ்வை முற்றிலும் நம்புபவர்களுக்கு அவனே (முழுதும்) போதுமானவன்" (65:3)

என் முழு நம்பிக்கையும் அந்தத ரட்சகன் மீதே சாட்டிவிட்டேன். அவனே எனக்கு ஆதரவாளனாயும் நல்ல வக்கீலாயுமிருக்கிறான்.

இவ்விதம் ஹாத்தம் அவர்கள் விளக்கியதும், "ஹாத்தம், நான் தௌராத், இன்ஜீல், ஜபூர், புர்கான் ஆகிய நான்கு திருமறைகளையும் ஆராய்ந்தேன். நீங்கள் எடுத்துக்கூறிய யாவும் இவ்வேதங்களில் பொதிந்து கிடக்கின்றன. இந்த 8 ஞானபோதங்களைச் சரியாக எடுத்து நடந்தவன் நான்கு திருவேதங்களுக்கும் ஏற்ப ஒழுகி நடந்தவன் போலாகிறான். ஹக்குத்தஆலா, உங்களுக்கு நல் அருள்பாலிப்பானாக!" என்று ஆசிர்வாதித்தார்கள். அன்பு

மகனே, மேற்கூறப்பட்ட சம்பவத்தை நன்கு சிந்தித்தால் உலக ஞானத்தை அதிகமாகக் கற்கத் தேவையில்லை என்பதைத் தெரிந்து கொள்வாய்.

ஞானமார்க்கத்துக்கு அவசியமான ஐந்தாவது விஷயம் இத்தகைய நாட்டமுள்ளவனுக்கு ஒரு ஞானாசிரியர் (முர்ஷித்) மிக மிக அவசியம் என்பதாகும். ஏனெனில், பரமார்த்தீகப் பாதையில் ஆத்ம விசாரணையிலீடுபடுபவன் வழி தவறாமல் சரியான பாதையில் செல்ல அந்தக் குருதான் வழிகாட்ட முடியும். விளை பூமியைப் பயன்படுத்தி, களையெடுத்து, விளைச்சலை அமோகமாக்கும் கிருஷிகனைப் போன்ற அந்த ஞானாசிரியர், முரீதிடம் காணப்படும் களைகளென்ற தீய குணங்களை அகற்றி அழகிய ஒழுக்கங்களைச் சரியாக அனுஷ்டிக்க முறையான பயிற்சி தருவார். அற்பமான செடி, கொடிகளைச் செம்மையாக வளர்க்கவே ஒரு கிருஷிக நிபுணன் தேவை என்றால், நுட்பமாக அகமியங்கள் பல அடங்கிய பாரமார்த்தீக, மோட்சப் பாதையில் பழக்கமில்லாதவர்களை அழைத்துச் செல்ல ஒரு திறமையான ஞானகுரு (ஷைகு) அவசியந்தானன்றோ! இதனால்தான் ஹக்குத்தஆலாவும் தன்னடியார்கள் வழிதவறிப் போகாமலிருப்பதற்காகவே நபிமார்களையும், மெய்யடியார்களையும் அனுப்பி அவர்களைப் பக்குவப்படுத்துகிறான். இருலோக ரட்சகர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் இவ்வுலகை விட்டுப் பிரிவதற்குமுன் தம் மெய்யன்பர்களான சஹாபாக்களைத் தங்களுக்குப் பின் உம்மத்துகளுக்கு "ஞானமார்க்கப்" போதகர்களாக நியமித்துச் சென்றுள்ளார்கள். இத்தொடர்பு இறுதிநாள் வரையும் இடைவிடாமல் இருந்தே வரும்.

ஆகவே, அவசியம் ஒரு தவசீலரான ஷைகிடம் போதனை பெறுவது மிக மிக அவசியம். அவ்வாறு உன்னால் ஷைகாகத் தீட்சைக்கு எடுத்துக் கொள்ளப்படுபவர் ஆலிமாய், ஒழுக்கசீலராய்த் திகழ வேண்டும். ஆலிம்களெனப்படுவோர் எல்லோருமே இம்மகத்தான பணிக்குப் பயன்படுவார்கள் என்று எண்ணி விடாதே! ஆத்மஞானத் துறையில் பாரமார்த்தீக அகமியங்களைச் சரியாக உணர்ந்த ஆலிம்களே இதற்கு அருகதையுடையவர்களாவர். பகல்வேஷ மஷாயிக்குகள் ஞானிகள் என்றும், ஸூபிகள் என்றும் கூறி உன்னை ஏமாற்றி விடாமலிருக்க மெய்யான ஷெய்கின் சில அடையாளங்களைச் சுருக்கமாக இங்கே தருகிறேன்:-

மெய்யான முர்ஷிதென்பவர் பொன், பொருள், இகத்தின் பட்டம் பதவிகளை வெறுத்துத் தம் உள்ளத்தைச் சம்பூரணமாகத் தூய்மைப்படுத்தி கொண்டிருப்பார். அவரும் வேறொரு தூய ஞானிகள் பெருமானிடம் ஆத்மஞானப் போதம் பயின்று சித்தி பெற்ற சாதகராய் இருப்பார். சில சமயங்களில் இக்குரு – சிஷ்ய தொடர்பு ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரையும் கூடச் சென்றிருக்கும். இந்த முர்ஷிதானவர் குறைந்த உணவு, குறைந்த பேச்சு, குறைந்த தூக்கம், அதிகமான தொழுகை, அதிகமான நோன்பு, அதிமான தானதர்மங்களை செய்து மெய்யான ஆசார சீலராகத் திகழ்வார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மிக மிக உவப்பான தூய ஒழுக்கம், சகலவற்றிலும் அல்லாஹ்விடமே சரணாய் விடுதல், பொறுமை, நன்றி, தவக்கல், எகீனென்ற ஈமானின் உறுதி, நற்சாந்தி, தயாளம், பணிவு, ஞானவிகாசம், வாய்மை, காம்பீரியம், நாணம், அமைதி, திருப்தி, போன்ற சத் ஒழுக்கங்களிலும் பெருமானாரிடமிருந்து ஒளி பெற்றிருப்பார். மேலும் தற்பெருமை, கோபம், பொறாமை,

கபடம், பேராசை, இகத்தின் ஆசாபாசம், அறிவீனம், வீண்பிடிவாதம் முதலிய நாச நடத்தைகளை தவிர்த்தவராயுமிருப்பார். இப்படிப்பட்ட குணசீலரே, ஞானிகள் நாயகமே, ஞானப் பாதையைச் சரியாகத் துலக்க முடியும்.

இக்காலத்திலோ, வீணர்களும் வேஷதாரிகளும் பெருத்து முரீதுகளை, வீண் விளையாட்டுக்களிலும், இகத்தின் இச்சா நுகர்ச்சிகளிலும் புகுத்தி ஷரீஅத்திற்கு மாறு செய்யுமாறு தூண்டி விடுகின்றனர். இவர்கள் பெருகிவிட்டதனால்தான் உண்மையான மகான்கள் தங்கள் "ஜாவியாக்களில்" மறைந்து ஒதுங்கிக் கொண்டனர்.

மேலே நான் குறிப்பிட்ட சில அடையாளங்களிலிருந்து மெய்யான ஞானகுருயார் என்பதை நீ அறிந்து கொண்டிருப்பாய். இச்சிறந்த பண்புகளைப் பெற்ற ஞானதேசிகர், பரம துறவி ஷைகாகக் கிடைத்தால் அவரை அணுகி ஞானப் பயிற்சி பெறு. அம்மகானுக்கு உள்ளும் புறமும் பணிந்து சங்கை செய். அவருடன் சச்சரவிடுவதோ, அவர் போதிப்பது தப்பானது போன்று வெளிக்குத் தெரிந்தாலும் அவர் மீது குற்றம் கூறுவதோ,(அவர் அனுமதித்தாலன்றி) அவனுக்கு முன்னால் நின்று தொழுவதோ, தொழுகை முடிந்ததும் விரிப்பை மரியாதைக்காக விட்டுவிடுவதோ, அவருக்கு எதிரிலேயே அதிகமாக நபில் தொழுவதோ, அவருக்கோ, அன்றி வேறெதற்குமோ சஜ்தாச் செய்வதோ கண்டிப்பாக விலக்கப்பட வேண்டியவைகளாகும். மேலும் அவர் சொல்லும் ஏவல்களுக்கெல்லாம் முழுக்க முழுக்க வழிப்பட்டு நடக்க வேண்டும். சிலசமயம் அவர் செய்யும் போதனை மேலுக்குப் பாவமானது போலும் தோன்றும். அதை மீறக் கூடாது. இவை வெளிப்படையான சங்கைகள்.

ஷெய்கிடமிருந்து வெளிப்படையாக ஏற்றுக் கொண்ட அனைத்தையும் உன் வாய்மை, தூய்மையோடு மனப்பூர்வமாக ஏற்க வேண்டும். இல்லையேல் நீ ஒரு முனாபிக்காய் (நயவஞ்சகனாய்) இருந்து விடுவாய், அவ்வாறு உள்ளும் புறமும் ஒன்றித்த பொறுமை காட்ட உன்னால் இயலாவிடின் அப்பக்குவ நிலை உனக்குச் சீர்படும்வரை அம்மகான்களிடம் நெருங்காதே. அத்தகைய குழம்பிய நிலையில் தீட்சை பெறுவதும் நல்லதன்று.

ஆறாவதாக, உன் நப்ஸின் அதிகாரம் என்ற இச்சா குணத்துக்கு மாறு செய்ய வேண்டும். தீயோரின் சகவாசத்தை ஒதுக்காதவரை ஜின், மனிதர்களில் காணப்படும் இந்த ஷைத்தான் சேட்டைகள் ஒருக்காலும் உன்னை விட்டகல மாட்டா.

ஏழாவதாக, துறவு நிலையில் சித்தி பெற்ற பகீர்களின் அழகிய குணங்களையே நீ ஏற்றுக் கொள்ள வேண்டும். இம்மையின் ஆசாபந்தங்களை எல்லாம் நீக்கிச் சுத்த சுயம்பவாய்ச் சமைந்து விடுவதுதான் பாரமார்த்தீக வழியில் நடப்பதற்கு அடிப்படையாகும். இகத்தின் பாசங்களைத் துறந்துவிட்ட பக்குவநிலை உன்னுள் மிளிராதவரை "பக்ரு" என்ற "நிர்வாணநிலை" உன் இதயத்தில் தரிக்காது. ஆத்மத் தூய்மைக்கான விமோசனமும் விரைவில் கைகூடாது. ஆகவே, உறுதியோடு துறவு நிலையை ஏற்காதவரை ஏனையப் பக்குவங்கள் உன்னுள் நிலை பெறமாட்டா. மெய்யான வழியில் நடப்பவனுக்கு இந்த ஏழு பயிற்சிகளும் அத்தியாவசியமானவையாகும்.

**தஸவ்வுப்**

தஸவ்வுப் என்னவென்று விளக்கம் கேட்கிறாய். மெய்யாகவே, அல்லாஹ்விடம் சரணாகிவிடுதலும், சிருஷ்டிகளோடு தூய ஒழுக்கத்துடன் பழகிக் கொள்ளுதலும்தான் "தஸவ்வுப்" எனப்படும். அல்லாஹ்விடம் தன்னை முற்றிலும் அர்ப்பணித்து விட்டு மக்களோடு சன்மார்க்க நெறிதவறாமல் நடந்து கொள்வோரனைவரும் ஸூபிகளே. ஷரீஅத்தின் ஏவலுக்கு முன் தன் நப்ஸின் தூண்டுதல்களையும் ஆசாபாசங்களையும் அழித்தே விட வேண்டும். தன் சுயநலத்தை விட ஜனங்களின் நன்மையையே ஸூபி பிரதானமானதாகக் கருத வேண்டும். ஆனால், இவர் நாட்டமும், ஜனங்களின் நாட்டமும் சன்மார்க்க விதிகளுக்கு முழுவதும் ஒத்திருக்க வேண்டும். ஏனெனில், ஷரீஅத்துக்கு மாறு செய்தாலும் அல்லது செய்வதை விரும்பினாலும் அவன் ஸூபியாக இருக்க அருகதையற்றவன். அப்படி வாதிப்பானாயின் அவன் பொய்யனாவான்.

**இபாதத்**

வணக்கம் பற்றியும் விளக்கம் வேண்டுமென்கிறாய். "சிருஷ்டிகர்த்தாவைத் தவிர வேறெந்தப் பொருள் மீதும், சிந்தனையைச் செலுத்தாமல், அவைகளின் நினைவக் கூட மறந்து ஹக்குத்தஆலாவின் சந்நிதியில் அடியான் ஆஜராய்விடுவதே "இபாதத்"(வணக்கம்) ஆகும். ஷரீஅத்தின் ஏவல் விலக்கல்களில் உஷாராக, தவறின்றி, விழிப்புடன் ஒழுக வேண்டும். ரட்சகன் விதிப்பின்(களா, கத்ர்) முடிவைத் திருப்தியுடன் ஏற்கவேண்டும். நப்ஸின் இச்சைக்குப் பணியாமல் ஹக்குத்தஆலாவின் சித்தமே உன் பாக்கியமாக வரித்துக் கொள்ள வேண்டும். இம்மூன்று படிவமும் சீர்ப்பட்ட பின்பே இறைவன் சந்நிதியில் சதாவுமிருந்துவிடும் மகோன்னத நிலை சித்தியாகும்.

**தவக்கல்**

தவக்கலைப் பற்றியும் கேட்கிறாய். "அல்லாஹ் உனக்களிப்பதாக வாக்குத் தந்தவைகளைக் கட்டாயம் உனக்குத் தருவான்" என்பதை மகா உறுதியுடன் நம்பு. சிருஷ்டிப் பொருள்களின் எவ்வளவு பெரிய சக்தியும் கூட இந்த உன் உறுதியைக் குலைக்க இடம்தரக் கூடாது. இவ்வுலகம் முழுவதுமுள்ள சக்திகளனைத்தும் ஒன்று திரண்டு வந்தாலும் உனக்குக் கிடைக்க வேண்டிய பேற்றினைத் தடுத்துவிடவோ, உனக்கு அளிக்கப்படாதவைகளை அள்ளி வழங்கி விடவோ முடியாது. இவ்விதம் திட சங்கல்பம் கொள்வதற்கே "தவக்கல்" என்று பெயர்.

**இக்லாஸ்**

உன் செயல்களில் தூய்மையுள்ளவனாயிரு. அவற்றைச் செய்யும்போதும்இ செய்த பின்னரும் ஹக்குத்தஆலாவுக்கன்றிச் சிருஷ்டிச் சிருஷ்டிப் பொருள்களின் முகஸ்துதிக்கோ, தாட்சண்யத்துக்கோ உன் உள்ளத்தில் இடம் தராதே. சிருஷ்டிப் பொருட்களின் போற்றலையோ தூற்றலையோ பொருட்படுத்தாதே! "சஜ்தா"வின் அடையாளம் உன் நெற்றியிலிருக்க வேண்டுமென்றோ அதிக வணக்கத்தினால் நூர் என்ற தேஜஸ் உன் வதனத்தில் பொலிவுடன் பிரகாசிக்க வேண்டுமென்றோ ஒருக்காலும் உன் மனத்தில் ஊசாட்டம் உண்டாகவிடாதே. ஜனங்களின் புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் உன் வணக்கத்தைப் பொறுத்தவரை சமமாகவே மதித்துவா. இதுவே மெய்யான "சித்த சுத்தி" என்ற இக்லாஸின் உண்மையான தாத்பரியமாகும்.

**ரியா**

பிறர் மெச்ச ஒரு காரியத்தைச் செய்வதற்கே “ரியா“ என்று பெயர். சிருஷ்டிப்பொருட்கள்தான் மகா மேலானவை. அவற்றின் சக்தி மகத்தானது என்று நீ கருமஜ விட்டால்தான் இத்துர்க்குணம் உன்னில் உண்டாகிறது. சர்வலோகங்களும் இறைவன் வசத்திலுள்ளன. சிருஷ்டிப் பொருட்களால் நன்மையையோ, தீமையையோ, வேறு எதையோ அல்லாஹ்வின் நாட்டமின்றி நிகழ்த்தி விட முடியாது. அவை அற்பமான தாதுவர்க்கமே. அவற்றுக்கெனத் தனியாக ஒரு நாட்டமோ, சக்தியோ இல்லை என்று நீ உறுதியாக நம்பவேண்டும். “ரியா“ என்ற கெட்ட குணத்தை நீக்க இதுவே பரிகாரமாகும். இதற்கு மாறாக “சர்வ சிருஷ்டிப் பொருள்களுக்கும் நாட்டமும் சக்தியும் இருக்கின்றன. அவைதாம் மகத்தானவை“ என்று எண்ணிக் கொண்டிருக்கும்வரை “ரியா“ என்ற இதயப் பிணி உன்னை விட்டு அகலாது.

செல்வ! மேலும் உன்னுடைய கேள்விகள் சிலவற்றுக்கு என்னுடைய பெரிய நூற்களில் விளக்கம் தந்துள்ளேன். அவைகளைப் படித்துத் தெரிந்து கொள். மற்றம் சில வினாக்களுக்கு விளக்கம் தருவதாயின் அஃது உன்னால் சுலபமாக விளங்கிக் கொள்ள முடியாத அவ்வளவு சூக்குமமான விசயங்கள் அடங்கியதாயிருக்கும். ஆயினும், நான் விளக்கிய முறையில் உறுதியோடு நீ அமல் புரிந்து வந்தால் சூக்கும நுட்பங்களும், ஞான அகமியங்களும் தாமே தெளிவுபடும். இதற்குப் பிறகும் உனக்கு என் விளக்கங்களில் ஐயம் உண்டானால் அந்த உன் சூழ்நிலைக்கு உகந்த மாதிரியே கேள.

“நீர் வெளிப்பட்டு அவர்களிடம் வரும்வரையில் அவர்கள் பொறுத்திருந்தால் அஃது அவர்களுக்கு எவ்வளவோ நன்றாய் இருந்திருக்கும்“ (49:5)

என்ற திருவசனத்தையும் “எவ்விஷயத்தையும் நானாகவேவ உமக்கு அறிவிக்கும்வரையில் நீர் என்னிடம் அதைப் பற்றிக் கேட்காதீர்“ (18:70)

என்ற கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்களின் உபதேசத்தையும் ஏற்று நட. மேலும் மேலும் கேள்விகளைக் கேட்டுக் குழம்பிக் கிடக்காதே. உனக்கோர் அரிய சந்தர்ப்பம் கிட்டி, அதுவே உன் ஐய வினாக்களுக்குப் போதிய விடையளித்து ஒளி காட்டும். “விரைவிலேயே எம் அற்புதங்களைக் காட்டுவோம். ஆகவே, நீங்கள் அவசரப்பட வேண்டாம்“ என்ற சமிக்ஞையின் அகமியத்தை உணர்ந்துபார். நீ அல்லாஹ்வின் ஞானப் பாதையில் நடந்து அவன் சந்நிதியில் சேராவிடின் ஆத்ம அகமியங்களை உணரமாட்டாய்.

“இவர்கள் பூமியில் சுற்றிப் பார்க்க வேண்டாமா? அவ்வாறாயின், இவர்களுக்கு முனனிருந்தவர்களின் முடிவு எவ்வாறாயிற்றென்று கண்டு கொள்வார்கள்“ (30:9)

என்ற திருவசனத்தைக் கவனி. மகனே, ரப்பின் மகத்துவம் மிக்க ஞானப் பாதையில் விரைவாக நடக்கத் தொடங்கியதும் கண் கொள்ளாக் காட்சியான அற்புதங்களையெல்லாம் தரிப்பாய். நீ, வணக்கம் புரிவதோடு ஆத்ம பரிபக்குவம் பெற்று, ரப்பின் சந்நிதியில் சென்று நின்று கொள்ள வேண்டும். ஆத்மப் பண்பாடின்றி வெறும் வணக்கத்தால் மட்டும் பயனில்லை. துன்னூன் மிஸ்ரி தமது சிஷ்யரிடம், “நீ ஆத்மப் பரிபக்குத்தை விரும்பினால் மட்டும் என் பின்னே வா. இல்லையேல் ஸூபிகளின் பாவனைகளிலும், அவர்களின்

அகமியம் நிறைந்த சங்கேதப் பாஷைகளிலும் ஈடுபடாதே! என்று அறிவுறுத்தியதை உனக்கும் நினைவூட்டுகிறேன்.

**எட்டு அரிய ஞானபோதங்கள்**

மகனே, மீண்டும் சுருக்கமாக எட்டு ஞானபோதங்களைத் தருகிறேன். அவற்றை உணர்ந்து, அவற்றுக்கேற்ப நடந்து கொள். அவற்றில் நீ விட்டுவிட வேண்டிய நான்கு விஷயங்களும், எடுத்து நடக்க வேண்டிய நான்கு விஷயங்களும் அடங்கியுள்ளன. நீ இந்த உபதேசங்களின்படி நடப்பாயாயின் கியாமநாளன்று அல்லாஹ்வின் முன் உன் அறிவே உனக்கு எதிரியாக நிற்காமல் வழிகாட்டி உதவும். முதலில் நீ செய்ய வேண்டாத கருமங்களைக் கவனிக்கலாம்.

1. எந்தப் பிரச்சனைக்காகவும் இயன்றவரை விவாதத்தில் இறங்காதே! விவாதத்தால் நன்மைகளை விடத் தீமைகளே அதிகம் விளையும். மேலும், தற்பெருமை, பொறாமை, மமதை, பகைமை மனப்பான்மை முதலிய துர்க்குணங்களுக்கும் இதுவே ஆணிவேராகும். ஒரு மஸ்அலாவில் (மார்க்கப் பிரச்சனை) ஒருவனுக்குத் தர்க்க ரீதியாக உண்மையை விளக்க வேண்டிய அவசியமிருப்பின் அவ்விதம் செய்யலாம். ஆனால் விளக்கம்தான் பிராதனம். உண்மை உன் வாயிலிருந்தோ, உன் எதிரியின் வாயிலிருந்தோ வெளிவந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும். கூடியவரை உன் எதிரியின் வாயிலிருந்தே உண்மை விளக்கம் வெளிப்பட நீ முயல வேண்டும். அப்போதுதான் அவனும் அதை ஏற்று விவாதம் விரைவில் முடிய ஏதுவாகும். அப்போதும் இந்தப் பரிசீலனையைப் பகிரங்க இடத்தில் செய்யாது தனிமையில் நடத்துவதே நலம்.

ஒருவனுக்கு ஒரு "மஸ்அலா" வைப் பற்றி விளக்கம் கொடுப்பதாக வைத்துக் கொள். அதில் நீ சொல்லுவதுதான் சரி என்றும் வைத்துக் கொள். ஆயினும், அதை அவன் மறுத்துக் கிண்டல் செய்ய ஆரம்பித்தால் அத்துடன் உன் விளக்கத்தை நிறுத்தி விடு. அந்நிலையில் மீண்டும் மீண்டும் அவனுடன் விவாதிப்பதால் பயனைவிடப் பகைமைதான் அதிகமாகும். சிக்கலான கேள்வியைக் கேட்பவன் வைத்தியனிடம் தன் உடல் நோயைக் கூறும் நோயாளி போன்றவன். ஆகவே, அவன் கேள்விக்குப் பதிலளிப்பதுநோயை நீக்க வைத்தியன் செய்யும் சிகிச்சை போன்றிருக்க வேண்டும்.எனவே, ஜாஹிலானவன் (அறியாதவன்) ஒருநோயாளி போன்றும், ஆலிம்(அறிஞர்)கள், பிணி தீர்க்கும் வைத்தியர்கள் போன்றும் உள்ளனர்.

ஆகவே, ஆத்மநோய் பற்றியவர்களை அரைகுறையான ஆலிம்களால் ஒருக்காலும் குணப்படுத்த முடியாது. அதற்கென வியாதியின் நுட்பமான மர்மத்தைத் திறமையோடு அறிந்து கொள்ளும் மாபெரும் நிபுணர்களான ஞானிகள் நாயகங்களில் ஒருவரே தேவைப்படுவார். சில சமயங்களில் மகா கொடிய நோயுமிருக்கும். அதற்காக அம்மகா நிபுணர் சமயம் பார்த்துச் சிகிச்சை செய்யலாமென்று ஒதுங்கிக் கொள்வார். "அறியாமை" என்ற கோரப்பிணி நான்கு வகைப்படும். அவற்றில் மூன்றை நீக்கவே முடியாது. ஒன்றுக்கு மட்டும் சிகிச்சை செய்யக் கூடும்.

**நான்கு வகை அறியாமை**

முதல்வகை அறியாமை பொறாமையுடன் வினா விடுப்பதாகும். பொறாமையுடன் விடுக்கப்படும் வினாக்களுக்கு இந்தப் பொறாமையே மாபெரும் பிணியாகம். அதற்குச் சிகிச்சையே இல்லை. எவ்வளவுதான் நுட்பமாகவும், தெளிவாகவும், அழகாகவும் பதில் கொடுத்தாலும் எதிரிக்கு மேலும் மேலும் பொறாமைத்தான் பொங்கும். இதன் முடிவு அவனைத் தற்பெருமைக்காரனாகத்தான் ஆக்கிவிடும். "எல்லாப் பகையையும் நீக்கி விடலாமென்று நம்பலாம்ஆ ஆனால் பொறாமையால் எழும் பகையை மட்டும் ஒருக்காலும் நீக்க முடியாது" என்று ஒரு கவிஞன் கூறியுள்ளதை உணர்ந்துப் பார்! ஆகவே, அவனை அவன் நோயோடு விட்டுவிட்டு நாம் ஒதுங்கிக் கொள்ள வேண்டுவது அவசியம். இதைத்தான்

"எவன் என்னைத் தியானிக்காது விலகி இவ்வுலக வாழ்வைத் தவிர (எதையும்) விரும்பாதிருக்கின்றானோ அவனை நீர் புறக்கணித்துவிடும்" (53:29)

என்று இறைவன் கூறியுள்ளான். இந்தப் போதனையை மறந்து மீண்டும் மீண்டும் அவனுக்கு ஞான சிகிச்சை செய்ய முயன்றாயோ, அவன் பொறாமைத் தீ அதிகமாகுமேயன்றித் தணியாது. "நெருப்பு விறகைத் தின்பது போல் பொறாமை நற்கருமங்களைத் தின்று விடும்" என்ற ஹதீதின் உண்மையை உற்றுணர்ந்து பார்!"

இரண்டாவது வகை அறியாமை மூடத்தனமாக கேள்விகள் விடுப்பதாகும். இதற்கும் சிகிச்சை இல்லை. "பிணத்தைக் கூட உயிர்பெற்று எழச் செய்ய எனக்குச் சக்தி இருக்கிறது. ஆனால், அறிவிலியை என்னால் சீர்படுத்த முடியவில்லை" என்று ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியுள்ளார்கள். இவனோ இரண்டு மூன்று நாட்களையே தன் கல்விக்காக செலவிட்டிருப்பான். விஞ்ஞான தொழில் நுட்பத்தின் சாயல்கூட இவன்மீது பட்டிருக்காது. இந்நிலையில் காலஞானத்தின் நுட்பங்களை அறிவதற்காகத் தங்கள் ஆயுளையே அர்ப்பணித்த ஞானமேதைகளோடு மோத வந்துவிடுவான்.மகா மேதைகளிடம் அற்பமான அறிவிலிகள் சென்று விவாதிப்பதும் ஒருவித மடமைதான் என்பதைக் கூட உணராத பெருமடையன் இவன். தன்ஞான சூன்யத்தையும் உணர்வதில்லை. அம்மகாமேதைகளின் ஞான விகாசத்தையும் அறியச் சக்தி இல்லை. இவனுக்குப் பதில் கொடுத்து ஞான சிகிச்சை செய்ய முயலக்கூடாது.

மூன்றாவது வகை அறியாமை விளக்கத்தைப் புரிந்து கொள்ளச் சக்தியற்றவனுடையதாகும். இத்தகைய அறியாமையுடையவன் தான் அறியாததை அறிவதற்காகவே விவாதிக்க வருவான். ஆனாலும், ஞானிகளின் நுட்பமான விளக்கத்தைப் புரிந்து கொள்ள இவனிடம் ஆற்றல் இருக்காது. இதற்கு இவன் அறிவு மந்தமே காரணம். அகமியங்கள் பல நிறைந்த ஆழமான கருத்துள்ள ஒரு சிக்கலான விசயத்தைத் தெரிந்து கொள்ளத்தான் வினவுவான். எனினும்இ அதை எடுத்து விளக்கினால் விளங்கிக் கொள்ள இயலாது. தனக்கு அந்தக் குறை இருப்பதையும் தெரிந்து கொள்ள மாட்டான். இவனுக்கு விளக்கம் கொடுத்துக் கொண்டிருப்பதும் வீண் வேலைதான். இங்கே, "மக்கள் அறிவின் தரத்துக்குத் தக்கவாறே போதிக்கும்படி தீர்க்கதரிசி (நபிமார்)களான நாங்கள் ஏவப்பட்டுள்ளோம்" என்ற நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருமொழியை நினைவூட்டுகிறேன்.

கடைசிவகை அறியாமை வருமாறு: விவாதிக்க வருபவன் விளங்கிக் கொள்ளும் திறனும், கூர்ந்த மதியும் உடையவனாகவம், கோபம்,பொறாமை, நப்ஸின் தூண்டுதல் ஆகியவற்றுக்கு வசப்படாதவனாகவும், இம்மையின் செல்வங்கள் மீது இச்சையற்றவனாகவும்இ புகழை விரும்பாதவனாகவும், சத்தியத்தைத் தேடி ஞானப் பாதையில் நடக்க ஆவல் கொண்டு விளக்கம் கேட்பவனாகவும் இருப்பான். இவனுக்குச் சிகிச்சை செய்யலாம். இவன் ஐய வினாக்களுக்குப் பதில் அளித்து தெரிவிக்க வேண்டியது ஞானவழிகாட்டிகள் மீது அத்தியாவசியக் கடமையும் கூட.

செய்ய வேண்டாத இரண்டாவது கருமமாவது: நீ போதிக்கும் போதனைக்கொப்ப நீயே நடக்காதவரை, பஜிக்கும் திக்ரின் அகமியத்தை நீயே சரியாக உணர்ந்து கொள்ளாதவரை.பிறருக்கு உபதேசிக்கவோ, மற்றவர்களைத் திக்றுச் செய்யத் தூண்டவோ வேண்டாம். “மர்யமின் மகனே, உம் நப்ஸுக்கு முதலாவதாக உபதேசம் செய்யும். அஃது ஏற்றுக் கொண்ட பின்பே மக்களுக்கு ஞானபோதம் பண்ண வேண்டும். இப்படி இல்லாவிடின் என்னைக் கண்டு வெட்கப்படும்“ ஈஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறைவன் அறிவித்ததைச் சிந்தித்துப் பார்.அவ்விம் நீ சொல்லுக்கொப்பச் செயல்படுபவனாகச் சமைத்துவிட்டாலும் கூட அப்போதும் இரு விசயங்கள் குறித்து எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும். முதலாவதாக, ஆத்மஞானத்தை விளக்கும் உன் பிரசங்கங்களில் சந்தேகங்களையும், சமிக்ஞைகளையும், அலங்காரக் கவிதைகளையும் ஆபாசச் சொற்களையும் அள்ளி வீசக் கூடாது. அப்படிப்பட்டவர்களை அல்லாஹ் அச்சமூட்டித் தனக்குப் பகைவர்கள் என்று அழைக்கிறான். ஏனெனில், அவ்வாறு பிரசங்கங்களை நிகழ்த்துபவன் உள்ளம் கெட்டு, அவன் இதயம் ரட்சகனை விடுத்து வேறு எங்கோ சென்று விடுகிறது. அவனை அல்லாஹ் வெறுக்கிறான். ஞானோபதேசம் என்ற பிரசங்கங்களின் லட்சியம் யாதாயிருத்தல் வேண்டும்? மறுமையின் வேதனைகளைக் குறித்துக் கேட்போரைச் சிந்திக்க வைக்க வேண்டும். ரப்பின் சமூகத்தில் எவை குற்றங்களாக ஆகுமென்பதை எடுத்துக் கூற வேண்டும்.

சிந்தித்துப்பார்! சென்றுவிட்ட மகத்தான நாட்களையும் வழியில் எதிர்படும் அபாயங்களையும் தாண்டி, எப்படிப் பரிசுத்த ஈமானோடு இம்மையிலிருந்து புறப்படுவாய்? மலக்குல் மௌத்து பிடிக்கும்போது ஏற்படும் பயங்கரத்தையும், முன்கர் நகீர் கேட்கவிருக்கும் கேள்விகளின் திடுகத்தையும் அதற்கு நீ கொடுக்கப்போகும் பதிலையும், இறுதித் தீர்ப்பு நாளின் பயங்கரத்தையும், அங்கு நிகழும் நிகழ்ச்சிகளையும் கேள்விக் கணக்குகேட்டு நீதி வழங்கப்படுவதையும் நரகத்தின் மீது கடந்து செல்ல வேண்டியதையும் அதன் பயங்கர ஆபத்துக்களையும் சிந்தனை செய்.

நாமும் இத்தகைய விசயங்களை நினைப்பதுடன் மற்றவர்களையும் இவ்வழியில் சிந்திக்கத் தூண்டவேண்டும். அவர்கள் தங்கள் குறைகளையும் பாவங்களையும் உணருமாறு தூண்ட வேண்டும். அப்போதுதான் மஜ்லிஸ்களில் கலந்து கொள்பவர்களின் இதயங்களில் ரப்பின் அச்சமும், நரகத்தின் உஷ்ணமும் உறைக்கும். ரட்சகனின் சோதனைகளை எண்ணிக் கடந்து போன நாட்களில் அவர்கள் செய்த பாவங்களுக்காகவும், சன்மார்க்கத்தில் நடக்காமல் கழித்த நாட்களுக்காகவும் அவர்கள் வெட்கிப் பாவமன்னிப்புக் கோரவும் தம் ஆத்மாவைக் குறித்தே பச்சாதப்படவும் மெய்யாகத் தூண்டும். இம்மகோன்னதக் கருத்தோடு அலங்காரச்

சொற்களோ, அடுக்கு மொழிகளோ இல்லாது எளிய உபதேசங்கள் புரிவதாலேயே ஞானோதயமும், மெய்வழித் துலக்கமும் உண்டாகும்.

மெய்யான ஞானோபதேசிக்கு ஓர் உதாரணம் கூறுகிறேன்: தன் மனைவிமக்களோடு இருக்கும் ஒருவன் திடீரென வெள்ளம் வந்து அதில் தன் மனைவி, மக்கள், சொத்து, சுகம் யாவும்அடித்துச் செல்லப்படும் அபாயகரமான நிலையிலிருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்நிலையில் அம்மனிதன் என்ன செய்வான்? "வெள்ளம் நெருங்கிவிட்டது. ஓடி விடுங்கள். அபாயம்! அபாயம்! என்று கதறுவானா? இல்லை அப்போதுதான் இலக்கியப்பாணியில், அடுக்குமொழியில், அலங்காரணமான சங்கேத பாஷையில் பேசிக் கொண்டு நிற்பானா? ஜனங்களுக்கு ஞானோபதேசம் தர அனாவசியமான அலங்காரச் சொற்பொழிவுகள் தேவையில்லை. இந்த உதாரணத்தை நினைவிலிறுத்திக் கொள்.

உன் உபதேசத்தில் எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய இரண்டாவது விஷயமாவது: நீ உபதேசிக்கும் சமயம் உன் ஞானபோதத்தைக் கேட்கும் கூட்டத்தினர் ஆரவாரிக்கிறார்களா, அழுகிறார்களா, ஆவேசம் கொள்கிறார்களா, "ஆஹா மகத்தான சொற்பொழிவு, அபார நாவண்மை" என்று போற்றுகிறார்களா என்றெல்லாம் உன் உள்ளம் சிந்திக்கவே கூடாது. இந்தத் தற்புகழ்சிந்தனை உன் அறியாமையால் ஏற்படுவதே. இம்மையின் இச்சாபந்தங்களிலிருந்தும், பாவகாரியங்களிலிருந்தும் ஜனங்களை விடுத்து ரட்சகன் வணக்கத்தின் பக்கம் திருப்ப வேண்டும். தூக்க நிலையிலிருக்கும் அவர்களை விழிப்பு நிலையிலாக்கி, அகப் பெருமையை விட்டு அல்லாஹ்வின் உள்ளச்சத்தின் பக்கம் ஆகுமாறு தட்டி எழுப்ப வேண்டும். மெய்வணக்கம், துறவு நிலை ஆகியவற்றின் அந்தரங்கத்தை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். "நம் செயல் அல்லாஹ்வுக்குச் சம்மதமானதுதானா அல்லவா, நம் நடத்தை ஷரீஅத்துக்கு உகந்ததுதானா அல்லவா, நம் ஒழுக்கமும் வணக்கங்களும் போற்றத் தக்கவையா, தூற்றத்தக்கவையா?" என்று அவர்கள் சிந்திக்கும்வரை அவர்களுக்கு நல்லுபதேசம் புரிந்து அவர்களுடைய உள்ளங்களைத் தொட்டுத் திருப்ப வேண்டும்.

அச்சம் மட்டும் மிகைத்தவர்களை அல்லாஹ்வின் பேற்றின் மீதும், ஆவல் மட்டும் மிகைத்தவர்களை அவன் அச்சத்தின் மீதும் திருபப வேண்டும். அப்போதுதான் மஜ்லிஸிலிருந்து எழுந்து செல்லும்போது தங்கள் மாசுபட்ட மனத்தை மாற்றி, உள்ளும் புறமும் ஒருமித்துத் தூய ஒழுக்கத்தை ஏற்கத் தயாராவார்கள். அல்லாஹ்வின் வணக்கத்தின் பக்கம் ஆவலோடு திரும்பி, சோம்பலை உதறி, பாவச் செயல்களை மனத்தால் வெறுத்துப் பக்குவமடைவார்கள். இவ்வாறு அமையாத வஃஜுகள் (உபன்னியாசங்கள்) அனைத்தும் சொல்வோருக்கும், கேட்போருக்கும் கேடாகவே முடியும். அது மட்டுமா? அந்த உபதேசி மனித உருவில் திரியும் ஷைத்தானும் பிசாசுமாவான். அத்தகைய மனித ஷைத்தான்களை விட்டு வைக்காமல் விரட்ட வேண்டியது சக்தியுள்ள அனைவர் மீதும் கடமையாகும். ஏனெனில், இந்தப் பிசாசுகள் புரியும் வழிகேட்டையும், குழப்பத்தையும் மெய்யான ஷைத்தான் கூடச் செய்ய அஞ்சுவான். இவர்களை மிம்பர்(மேடை) மீது ஏறவிடாது விரட்ட வேண்டியது மக்கள் அனைவர் மீதும் பெரும் கடமையாகும். ஷரீஅத்தும் அவ்வாறே ஆணையிடுகிறது.

மூன்றாவதாக, அரசர்களிடமும், அதிகாரிகளிடமும் நீ போகவோ, அவர்களோடு பழகவோ உட்காரவோ கூகூடாது. அவர்களுடன் உறவும் தொடர்பும் கொள்வதால் நீ சொல்லொண்ணா ஆபத்துகளுக்கு ஆளாவாய். உன்னையும் மீறி அப்பெரிய மனிதர்களைச் சந்திக்க நேரிட்டு விட்டால் அவர்களை ஏற்றிப் போற்றி மட்டும் பேசிவிடாதே. அவர்களே உன்னைச் சந்திக்க வந்தாலும் இதே கண்ணிய முறையைக் கைக் கொள். "கொடுமைக்காரனும் போக்கிரியும் புகழப்படும்போது அலல்லாஹ் கோபமடைகிறான். அநியாயக்காரனின் நீண்ட ஆயுளுக்காகத் துஆச் செய்பவன் இறைவன் பூமியின் மீதே அவனுக்கு மாறு செய்பவனாகிறான்."

நான்காவதாக, ஹலாலான (ஷரீஅததில் ஆகுமென்று அனுமதிக்கப்பெற்ற) பொருள்களாலும் அரசர்கள் அதிகாரிகளிடமிருந்து அவற்றைச் சன்மானமாக ஏற்றுக் கொள்ளாதே. எவைகளில் ஆசை வைத்தாயோ, அவையே உன்சன்மார்க்க நாசத்துக்கும் சத்தியத்தை மெழுகி மூடுவதற்கும் காரணமாகிவிடும். அவர்கள் நேசத்தின் பயனாய் அவர்களிடம் தாட்சண்யம் காட்ட நேரிடும். அதனால் அவர்கள் செய்யும் அநீதிகளிலல் நீயும் கூட்டாளியாக நேரும். உன் ஆதரவின் தூண்டுதலால் அநீதிகளையும், அக்கிரமங்களையும் கூசாது செய்வார்கள். பிறகு படிப்படியாகச் சன்மார்க்க மடங்களையும் நாசப்படுத்திவிடுவார்கள். நீ அவர்களை நேசிப்பாய். அதன் காரணமாக அவர்களின் நீண்ட ஆயுளுக்கு ரட்சகனிடம் பிரார்த்திப்பாய். இதனாலெலாம் அவர்களின் வரம்பு கடந்த செயல்களைத் தூண்டுவதையும் அதன் மூலம் உலகம் நாசமாவதையும் காணப் பிரியப்படுகிறாயா! சத்திய சன்மார்க்கத்தை விட்டு ஷைத்தான் உன்னைத் திருப்பாமலிருக்குமாறு பாதுகாக்க இறைவனிடம் பிரார்த்திக்கிறேன்.

அரசர்கள் அதிகாரிகளிடமிருந்து சன்மானங்களை ஏற்று அவற்றைத் தர்வேஷ்களுக்கும், ஏழைகளுக்கும் தானமிட ஷைத்தான் முதலில் உன்னைத் தூண்டுவான். நீயே அவ்வாறே அவசியமான நற்கருமங்களில் செலவிடுவாய். ஆனால், அது ஷைத்தானுக்கு விருப்பமில்லாத செயல். பிறகு மெதுவாக உன்னைப் பாவகருமங்களில் தூண்டிச் செலவிட வைத்துவிடுவான். இம்மாதிரிதான் இந்தப் பூமியில் அளவற்ற இரத்த ஆற்றை ஓடவிட்டிருக்கிறான். உணர்ச்சி பெறு. பேராசையால் விளையும் நாசகரமான ஆபத்துகள் அனந்தமுண்டு. அவைகளை "இஹ்யா உலூமுத்தீ"னில் விபரித்துள்ளேன். கண்டு தெரிந்து கொள்.

மகனேஇ நீஇ அவசியம் எடுத்து ஒழுகி வர வேண்டிய நான்கு விசயங்களை இனிக் கவனிக்கலாம். முதலாவது நீ ஏவிய காரியத்தை உன் வேலைக்காரன். ஒழுங்காக உனக்காக திருப்தியாகும் வகையில் செய்து முடிக்க வேண்டுமென்றுதானே எண்ணுவாய்? அதேபோல் நீயும் சர்வசக்தனான அல்லாஹ்வின் அடிமைதானே! அவன் ஏவல் விலக்கல்களையும் உன்னிடம் ஒப்படைக்கப் பெற்றுள்ள அமானிதங்களையும் ஒழுங்காக நிறைவேற்றுவது உன் கடமையாகும். உன் வேலைக்காரனிடமிருந்து கெட்ட செய்கைகளை நீ விரும்பாதது போலவேஇ நீயும் உன் எஜமானனின் சன்மார்க்க ஆணைக்கு மாறு செய்யாதே. உன் வேலையாளனோ சொற்ப ஊதியத்துக்குப் பணிபுரிய ஏற்படுத்தப்பட்ட பணியாளன். அடிமையல்ல. நீயோஇ உன்னை சிருஷ்டித்த காருண்யனான ரப்பினால் படைக்கப்பட்டவன். முழுக்க முழுக்க அவனது அடிமை. இதை மறக்க வேண்டாம்.

இரண்டாவதாக, ஏனைய சிருஷ்டிகளான மாந்தர்கள் உன்னிடம் எவ்வாறு பழகவேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அவ்வாறே அவர்களுடன் நீயும் நடந்து கொள்ள கடமைப்பட்டவன். இதைத்தான் நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "தனக்குப் பிரியமானதையே மற்றவர்களுக்கும் விரும்பாதவரை ஒரு மூமினின் "ஈமான் சம்பூரணம் பெற்றதாகாது" என்று அறிவுறுத்தியுள்ளார்கள்.

மூன்றாவதாக. நிச்சயமாக உனக்குப் பயனளிக்கும் கலாஞானங்களையே நீ கற்க வேண்டும். உன் ஜீவியத்தில் இன்னும் ஒரே ஒரு வாரம்தான் பாக்கி இருப்பதாக நீ அறிந்துள்ளதாக வைத்துக் கொள்வோம். அப்போது அந்த ஒருவார அவகாசத்தில் இலக்கணம், இலக்கியம், வைத்தியம் போன்ற கலைகளைக் கற்கவா நினைப்பாய்? நினைக்க மாட்டாயல்லவா? ஏனெனில். இக்கலைகள் மறுமையில் உன்னை ரட்சித்து ஈடேற்றமளிக்க முடியாது. மெஞ்ஞானப் பயிற்சிகளால்தான் உன் தூய உள்ளத்தோடு ரட்சகனையும் அவன் கல்யாண குணங்களையும் மெய்யாக அறிய முடியும். அதனால் தான் உன் தீய ஒழுக்கங்களையும். சிருஷ்டிப் பொருள்கள் மீது கொண்டுள்ள ஆசாபந்தங்களையும் துறந்து அழகிய அமல்களை அனுஷ்டித்து இரட்சகனையே உவப்பாய். அவன் "ஏவல்" என் மகத்தான வணக்கங்களைக் கொண்டு பராக்காவாய்.

மகனே, ஒரு சொற்கேள்! அதை மெய்யாக நீ நம்பி அதனுள் மறைந்திருக்கம் அகமியத்தைச் சிந்தனை செய். அதன்படி ஒழுகினால் உன் ஈடேற்றமும். முக்தியும் அதில் மறைந்திருப்பதை உண்மையிலேயே காண்பாய். இந்த வாரம் உன்னைப் பேட்டிக் காண ஒரு மகா ராஜாதிராஜா வருகிறாரென்று அறிந்தால் அப்போது நீ என்ன செய்வாய்? உன்னை ஒழுங்காக அலங்கரிதது்க் கொண்டு அரசனின் திருப்பார்வை எதெதில் படுமோ அவைகளையும் அழகுபடுத்திச் சிறந்த முறையில் மன்னரை வரவேற்க வேண்டிய காரியங்களைச் செய்வதில்தானே அந்தவாரம் முழுவதையும் உற்சாகத்தோடு கழிப்பாய்? இந்தப் புதிரின் உட்கருத்தை உணர்ந்து கொண்டாயானாயின் உன்னிடம் அந்த மகா சர்வாதிகாரியான அல்லாஹ் அவசியம் நோட்டமிடும் மகத்தான ஓர் இடமுள்ளது என்பதையும், அதுவே "கல்பு" என்னும் இதயம் என்பதையும் அறிந்து அதைத் தூய்மைப்படுத்த ஆயத்தப்படு. "அல்லாஹ் உங்கள் வடிவத்தையோ, வெளிநடத்தைகளையோ பார்ப்பதில்லை. எனினும், உங்கள் இதயங்களையும், எண்ணங்களையும் நிச்சயம் பார்ப்பான்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளதை ஊன்றிப்பார். மேலும் இதயத் தூய்மை, கல்பு சம்பந்தமான ஞானரகிசயங்களையும் எனது "இஹ்யா உலூமுத்தீன்" நூலிலும், வேறு பல கிரந்தங்களிலும் தெளிவாக விளக்கியுள்ளேன். அவைகளைப் படித்துக் கொள். இதுதான் "பர்ளு அய்ன்" (ஒவ்வொருவர் மீதும் கட்டாயக் கடமை). மற்ற கலாஞானங்கள். "பர்ளு கிபாயா" (யாரேனும் ஒரு சிலர் கற்றாலே போதும்) ஷரீஅத்தின் ஏவல் விலக்கல்களை அறிந்து அனுஷ்டிக்கத் தேவைப்படும் அளவுக்கு வேண்டுமானால் மற்ற கலாஞானங்களை கற்றுக் கொள்.

நான்காவதாக, உன் மனைவி மக்களுக்காக ஓர் ஆண்டுக்குத் தேவைப்படும் உணவையும் தேவைகளையும் மட்டும் தேடிவை. "இறைவா! முஹம்மதின் குடும்பத்தார்களுக்கு தினமும் தேவைப்படும் உணவை மட்டும் அளிப்பாயாக!" என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் ஒரு பிராட்டியருக்காகத் துஆச் செய்துள்ளார்கள். அதுவும் உம்முல் மு.ஃமினீன் ஹழ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா போன்ற அல்லாஹ்வின் மீது ஈமானும், தவக்கலும் உறுதிப்பட்டு உள்ள மற்ற மனைவியருக்கு இம்மாதிரிகூடத் துஆச் செய்யவில்லை. உற்று உணர்ந்து பார்!

மகனே. என்னிடம் நீ வினவியவையனைத்துக்கும் சுருக்கமாகப் பதில் எழுதியுள்ளேன். இதன்படியே நீ தவறாமல் ஒழுகி வா! உன் நல்வணக்கங்களுக்கிடையில் என்னையும் மறக்காமல் எனக்கும் துஆச் செய்துவருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ مِنَ النِّعْمَةِ تَمَامَهَا، وَمِنَ الْعِصْمَةِ دَوَامَهَا، وَمِنَ الرَّحْمَةِ شُمُوْلَهَا، وَمِنَ الْعَافِيَةِ حُصُوْلَهَا
وَمِنَ الْعَيْشِ اَرْغَدَهُ، وَمِنَ الْعُمْرِ اَسْعَدَهُ، وَمِنَ الْاِحْسَانِ اَتَمَّهُ، وَمِنَ الْاِنْعَامِ اَعَمَّهُ، وَمِنَ الْفَضْلِ اَعْذَبَهُ،
وَمِنَ اللُّطْفِ اَقْرَبَهُ، وَمِنَ الْعَمَلِ اَصْلَحَهُ، وَمِنَ الرِّزْقِ اَوْسَعَهُ، كُنْ لَّنَا وَلَا تَكُنْ عَلَيْنَا. اَللّٰهُمَّ اخْتِمْ بِالسَّعَادَةِ
اٰجَالَنَا، وَحَقِّقْ بِالزِّيَادَةِ اَعْمَالَنَا، وَاقْرِنْ بِالْعَافِيَةِ غُدُوَّنَا وَاٰصَالَنَا، وَاجْعَلْ اِلٰى رَحْمَتِكَ مَصِيْرَنَا وَمَآلَنَا،
وَاصْبُبْ سِجَالَ عَفْوِكَ عَلٰى ذُنُوْبِنَا، وَمُنَّ عَلَيْنَا بِاِصْلَاحِ عُيُوْبِنَا، وَاجْعَلِ التَّقْوٰي زَادَنَا، وَفِيْ دِيْنِكَ اِجْتِهَادَنَا،
وَعَلَيْكَ تَوَكُّلَنَا وَاِعْتِمَادَنَا، اِلٰهَنَا ثَبِّتْنَا عَلٰى نَهْجِ الْاِسْتِقَامَةِ وَاَعِذْنَا مِنْ مُوْجِبَاتِ النَّدَامَةِ يَوْمَ الْقِيٰمَةِ، وَخَفِّفْ
عَنَّا ثِقَلَ الْاَوْزَارِ، وَارْزُقْنَا عَيْشَةَ الْاَبْرَارِ، وَاكْفِنَا وَاصْرِفْ عَنَّا شَرَّ الْاَشْرَارِ، وَاعْتِقْ رِقَابَنَا وَرِقَابَ اٰبَآئِنَا
وَاُمَّهَاتِنَا مِنَ النَّارِ وَالدَّيْنِ وَالْمَظَالِمِ يَاعَزِيْزُ يَاغَفَّارُ يَاكَرِيْمُ يَاسَتَّارُ يَاحَلِيْمُ يَاجَبَّارُ بِرَحْمَتِكَ يَااَرْحَمَ الرَّاحِمِيْنَ،
صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى خَيْرِ خَلْقِهِ مُحَمَّدٍ وَاٰلِهِ وَاَصْحَابِهِ اَجْمَعِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. اٰمِيْن

அல்லாஹ்வே உன் சம்பூரண சௌபாக்கியத்தையும் நெடிய தூய்மையையும், அளவற்ற பேற்றினையும் குறைவற்ற சுகத்தையும், நல்வாழ்வையும், சிரேஷ்டமிக்க ஆயுளையும், நிறை அருளையும், பெருமித அருட்கொடைகளையும், இனிய சிறப்பையும், தயாளத்தையும், அழகிய அமலையும், பயன்தரும் ஞானத்தையும், அளவற்ற ரிஜ்கையும் எமக்கருள்புரிவாயாக! அபகாரியாயின்றி உபகாரியாய் இருப்பாயாக!

அல்லாஹ்வே, எங்கள் முடிவைச் சிறப்பானதாக்கு! நாங்கள் அதிகமான நல்லமல்களைச் செய்வதற்கு உறுதியைத் தந்தருள்! காலையையும், மாலையையும் எங்களுக்க பயனுள்ளதாக்கு! எங்கள் தங்குமிடங்களை உன் மகாபேற்றின் அணைப்பில் ஆக்கியருள்! எங்கள் குற்றம் குறைகள் மீது உன் மன்னிப்பு மழையைப் பொழிவாயாக! எங்கள் குறைகளை நாங்களே சரிசெய்து கொள்ள மனஉறுதியைத் தா! அச்சத்தை எங்கள் வழிமுதலாக்கு! உன் சன்மார்க்கத்திலே நடக்க ஊக்கமருள்! உன் மீதே எங்கள் நம்பிக்கை.

இறைவா! நேரான வழியில் சீராக நடந்து கியாமநாளில் நாங்கள், வெட்கிக்கும்படியான பாவகாரியங்களைச் செய்யாமலிருக்க எங்களின் அரணாயிருந்தருள்! எங்கள் பாவச்சுமையை இலேசாக்கு! உத்தமர்களின் சீரிய வாழ்வைத் தந்து எங்களுக்கு நம்பிக்கை கொடு! தீயோர்களின் சூது கௌவாமல் அகற்றியருள்!

சிறப்புக்குரிய அன்பனே! சங்கைக்குரியவனே! தயாளனே! பொறுமையின் சின்னமே, குற்றங்களை மறைத்து மன்னிப்போனே, சர்வாதிகார ரட்சகனே, நரக நெருப்பிலிருந்தும், கடன் கொடுமையிலிருந்தும் எங்கள் பெற்றோர்களின் பிடரிகளையும், காப்பாற்றுவாயாக! மகாபேற்றுக்கு உரியவனே, உன் பேற்றின் மீது ஆணையாகப் பிரார்த்திக்கிறேன். ஆமீன்.

முற்றும்.